T. 1733

சங்கநூல்களும் வைதிகமார்க்கமும்

டாக்டர் P. S. சுப்பிரமணிய சாஸ்திரி
இயற்றியது

திருப்பனந்தாள் மடாதிபதி
சீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகளின்
பொருளுதவியால்

திருச்சிறாப்பள்ளி
யுனைடெட் பிரிண்டர்ஸ் லிமிடெட், அச்சுக்கூடத்தில்
அச்சிடப்பெற்றது.

பதிப்புரிமை] **1951** [விலை ரூ. **1-8-0**

Printed at
The Trichinopoly United Printers Ltd.,
Tiruchirapalli.—500 copies

P. S. SUBRAHMANYA SASTRI, M.A., PH. D., L.T.
(*Vidyāratna, Vidyānidhi, Vāṇī-trivēṇī-prayāga*)

Professor of Oriental Studies, Bishop Heber College, Trichinopoly. 1917–26

Asst. Editor, Tamil Lexicon, University of Madras. 1926–32

Principal, Raja's College of Sanskrit and Tamil Studies, Tiruvadi. 1932–42

Professor of Sanskrit, Annamalai University, Annamalainagar. 1942–47

உ

முகவுரை

இந்நூலை இயற்ற ஊக்கம் அளித்த பெரியார்க்கு என் அன்பார்ந்த வந்தனத்தையும், அச்சிட ரூபாய் நானூறு கொடுத்து உதவிய சீலஸ்ரீ காசிவாசி அருணந்தி தம்பிரான் சுவாமிகள் அவர்கட்கு என் மனமார்ந்த நன்றியையுஞ் செலுத்துகின்றேன்.

அப்பர்பெருமான்

ஓதிய ஞானமும் ஞானப் பொருளு மொலிசிறந்த
வேதியர் வேதமும் வேள்வியு மாவன விண்ணுமண்ணும்
சோதியுஞ் செஞ்சுடர் ஞாயிறு மொப்பன தூமதியோடு
ஆதியு மந்தமு மானஐ யாற னடித்தலமே

எனப் போற்றும் திருவையாற்றில் எழுந்தருளியிருக்கும் அறம் வளர்த்த நாயகி, அப்பன் இவ்விருவர்தந்திருவடிகளில் இந்நூலைச் சமர்ப்பிக்கின்றேன்.

12, வடக்கு மடவிளாகம்,
திருவையாறு,
5—5—51

P. S. சுப்பிரமணிய சாஸ்திரி.

பொருளடக்கம்

சங்கநூல்களும் வைதிகமார்க்கமும் — பக்கம்

i. *சங்கநூல்கள் :—*

(1) தொல்காப்பியம் 1
(2) பத்துப்பாட்டு 3
(3) எட்டுத்தொகை 6
(4) பதினெண்கீழ்க்கணக்கு ... 8

ii. *வைதிகமார்க்கம் :—*

(1) வேதங்களும் அங்கங்களும் ... 13
(2) மக்கட்பிரிப்பு 17
(3) மக்கட்டொழில் 18
(4) மறுமை 19
(5) வழிபடுகடவுள் 20
(6) ஊழும் வீடும் 21

iii. *சங்கநூல்களும் வைதிகமார்க்கமும் :—*

(1) வேதங்களும் அங்கங்களும் 22
(2) வர்ணங்களும் ஆச்ரமங்களும் 26
(3) அக்னிஹோத்ரமும் யாகங்களும் 33
(4) இம்மையும் மறுமையும் 38
(5) தெய்வங்கள் 46
(6) ஊழ் 59
(7) ஏனைய செய்திகள் 61
(8) முக்தி 67

சங்கநூல்களும் வைதிகமார்க்கமும்

i. சங்கநூல்கள்

தமிழ்நாட்டில் பண்டைய காலத்தில் மூன்று சங்கங்கள் இருந்தன. அவை தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் ஆகும். தலைச்சங்ககாலத்தில் பல இலக்கியநூல்களும் பல இலக்கணநூல்களும் இருந்தன என்பது தொல்காப்பியத்திலிருந்து அறியப்படுகின்றது; ஆனால் அவை தற்போது கிடைத்தில. இடைச்சங்ககாலத்துநூல்களுள்ளும் தொல்காப்பியம் ஒன்றே இப்போது காணப்படுகின்றது. கடைச்சங்ககாலத்தில் இயற்றப்பட்ட நூல்களுள் தற்போது காணப்படுவன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு ஆகும். இவற்றுள் தொல்காப்பியம் இலக்கணநூல், மற்றவை எல்லாம் இலக்கியநூல்களே.

1

தொல்காப்பியம் : இந்நூலை இயற்றியோர் ஆசிரியர் தொல்காப்பியனார் ஆவர். அவர் கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்குப் பின்னர் இருந்திருத்தல் தகாது என்பது பல்லோரின் கொள்கை. இந்நூலுள் சுமார் 1610 சூத்திரங்கள் உள. அவை எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்ற மூன்று அதிகாரங்களில் அமைக்கப்பட்டன. எழுத்ததிகாரத்துள் சுமார் 480 சூத்திரங்களும், சொல்லதிகாரத்துள் சுமார் 465 சூத்திரங்களும், பொருளதிகாரத்துள் எஞ்சியவையும் இருக்கின்றன.

எழுத்துக்களின் எண்ணிக்கை, தன்மை, வகை, பிறப்பு இவற்றைப்பற்றியும், அவை புணரும்போது நேரும் மாறுதலைப் பற்றியும் எழுத்ததிகாரம் கூறும். இதனை வடமொழியில் சிக்ஷா என்பர்.

சொற்களின் வகையைப்பற்றியும், அவற்றின் அமைப்பைப் பற்றியும், அவை எவ்வாறு தொகையாகும் என்பதைப்பற்றியும், வாக்கியத்தில் அவை எவ்வாறு வழங்கப்படும் என்பதைப் பற்றியும் சொல்லதிகாரம் கூறும். இதனை வடமொழியில் வ்யாகரணம் என்பர்.

செய்யுட்களை ஆக்கும் வகையைப்பற்றியும், ஆங்கு உணர்த்தப்படும் சிருங்காரம், கருணம், வீரம் முதலியவைகளைப் பற்றியும், ஆங்குத் தோன்றும் உவமையணியைப்பற்றியும், ஆங்கு வழங்கப்படும் வழக்குச்சொற்களைப்பற்றியும், செய்யுட்களின் பொருளை அறிவிக்கப் பயன்படும் உத்திகளைப்பற்றியும் பொருளதிகாரம் கூறும்.

சிருங்காரச்சுவையைப் பற்றிய நூல்களை அகம் என்றும், ஏனைய சுவைகளைப்பற்றியவற்றைப் புறம் என்றுங் கூறுவர். சிருங்காரச்சுவை காந்தர்வமணத்தில் தான் சிறந்து விளங்கும். தலைவனும் தலைவியும் ஒருவரை ஒருவர் கண்டு நேசித்து மணஞ் செய்து கொள்வதாக நிச்சயித்தலைக் குறிஞ்சித்திணை என்றும், மணத்திற்காகப் பொருள் தேடுதற்குத் தலைவன் பிரிதலைப் பாலைத்திணை என்றுங் கூறுவர். மணம் நிகழ்ந்த பிறகு போர், கல்வி முதலியவற்றிற்காகக் கணவன் பிரிந்திருக்கும்போது தலைவி இருத்தலை முல்லைத்திணை என்றும், பரத்தையர் முதலியோரிடம் தலைவன் இருந்து பின்னர் மனைவியிடம் வர, அப்போது ஊடல் நேர அதனை மருதத்திணை என்றுங் கூறுவர். கடற்கரையில் தலைவனை விட்டு தலைவி வருந்துதலை நெய்தற்றிணை என்பர். அவ்வாறே புறத்திலும் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி, பாடாண் என எழுதிணைகள் உள. காந்தர்வமணத்தை ஒத்ததைக் களவு என்றும், சடங்குடன் பெற்றோர் தலைவியைக் கொடுக்கத் தலைவன் கொள்ளும் மணத்தைக் கற்பு என்றுங் கூறுவர். களவு, கற்பு இவற்றைப் பற்றி நான்கு இயல்களிலும், புறத்திணைகளைப்பற்றி ஓர் இயலிலும், சுவைகளைப்பற்றி ஓரியலிலும், உவமையைப்பற்றி ஓரியலிலும், செய்யுளமைப்பினைப்பற்றி ஓரியலிலும், வழக்கு உத்தி இவற்றைப்பற்றி ஓரியலிலும் ஆசிரியர் தொல்காப்பியனார் உணர்த்தியுள்ளார். இதனை வடமொழியில் அலங்காரசாஸ்திரம் என்பர்.

தொல்காப்பியத்தை ஊன்றிப் படிப்பின், அந்நூலிற்கு முன்னர் பல இலக்கியநூல்களும் பல இலக்கணநூல்களும இருந்தன என்பது நன்கு விளங்கும். அவற்றுள் ஒன்று கூட இப்போது காணப்படவில்லை. இது தமிழ்நாட்டிற்குப் பெருங் குறையே ஆகும்.

2

பத்துப்பாட்டு : திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப் படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் இவை பத்தனையும் பத்துப்பாட்டு என்பர். ஒவ்வொன்றும் ஒவ்வொரு கவியாற் பாடப்பட்ட காவியம் ஆகும். நக்கீரனார், கடியலூர் உருத்திரங்கண்ணனார் இவ்விருவரும் ஈரிரண்டு பாட்டுக்களைப் பாடியுள்ளார். ஆகலின் பத்து பாட்டும் எட்டு கவிகளாற் பாடப்பெற்றன. அவற்றுள் ஐந்து ஆற்றுப்படையாய் அமைந்துள்ளன. ஒரு புலவன் ஒரு புரவலனிடத்திற் சென்று பரிசு பெற்றுத் திரும்பும்போது எதிரில் மற்றொரு புலவனைக் கண்டு அவன் அப்புரவலனிடம் பரிசு பெற அவ்வாற்றின்கண் (அவ்வழியின்கண்) படுத்தலைப் (செல்லும்படி செய்தலை) பற்றிக் கூறும் நூலிற்கு ஆற்றுப்படை எனப் பெயர். திருமுருகாற்றுப்படை மாத்திரம் இவ்விலக்கணத்தினின்று சிறிது மாறுபடும். இவ்வகைப்பட்ட காவியம் தமிழ்மொழியில் மிகப் பழைமையானது என்பது,

ஆற்றுப்படை மருங்கிற் போற்றல் வேண்டும்
(தொல். சொல். 462, சேனா.)

என்ற அடியால் விளங்கும்.

திருமுருகாற்றுப்படை : இதனைப் பாடியவர் நக்கீரனார். ஒருவன் வீடு பெற விரும்பின் முருகக்கடவுளைத் திருப்பரங் குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை முதலிய ஆறு படைவீடுகளில் அவன் வணங்க வேண்டும் என இந்நூல் கூறும்.[1] ஈண்டு 317 அடிகள் உள்ளன.

பொருநராற்றுப்படை : இந்நூலைப் பாடியவர் முடத்தாமக் கண்ணியார். ஈண்டு வருணிக்கப்பட்ட புரவலன் சோழன் கரிகாற்பெருவளத்தான். அவனது கொடை, வீரம், அவன்

1. முருகக்கடவுளைக் காண பிரும்மா, விஷ்ணு, ருத்திரன் முப்பத்துமுக்கோடி தேவர்கள் இவரெல்லோரும் வந்தனர் எனத் திருவாவினன்குடியைப்பற்றிக் கூறுமிடத்து கூறப்பட்டுளது. அவ ரெல்லாம் தற்போது திருப்பரங்குன்றத்திற் காணப்படுகின்றனர். குன்றுதோறாடல் என்பதை ஒரு படைவீடாகச் சிலர் கூறுகின்றனர். இவ்வைந்தனையும் நீக்கி முருகக்கடவுள் இருக்கும் குன்றுகளனைத்தையும் ஒரு படைவீடாக ஆசிரியர் கூறினர் என்று கூறுவதே பொருந்துமெனத் தோன்றுகின்றது.

ஆண்ட சோழநாட்டின் வளம் முதலியன நன்கு கூறப் பட்டன. இங்கு 248 அடிகள் உள்ளன.

சிறுபாணாற்றுப்படை : இதனை இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார் பாடினர். நல்லியக்கோடனின் புரவன்மை உணர்த் தப்படுகின்றது. தமிழ்மூவேந்தரின் தலைநகரங்களைப்பற்றியும், பேகன், பாரி, காரி, ஆய், அதிகன், நள்ளி, ஓரி இவ்வெழு வள்ளல்களின் கொடையைப்பற்றியும் சிறிது கூறப்பட்டது. ஈண்டு 269 அடிகள் உள்ளன.

பெரும்பாணாற்றுப்படை : இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார். புரவலன் காஞ்சி நகரத்திலிருந்த தொண்டைமான் இளந்திரையன் என்ற அரசன். இங்குக் காஞ்சி நகரத்துள்ள ஐந்திணைப்பகுதிகளின் இயல்பும், அந் நகரத்தாரின் தொழில் முதலியனவும் வர்ணிக்கப்பட்டன. ஈண்டு 500 அடிகள் உள்ளன.

முல்லைப்பாட்டு : இதனைப் பொன்வாணிகனார் மகனார் நப்பூதனார் பாடினர். கணவன் போர்க்குச் சென்றபோது மனைவி இருத்தலைப்பற்றிச் சிறப்பாக இந்நூல் கூறும். ஈண்டு 103 அடிகள் உள்ளன.

மதுரைக்காஞ்சி : இதனைப் பாடியவர் மாங்குடி மருதனார். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழிய னுக்கு வீடு பெறும் உபாயம் இந்நூல் கூறும். அவன் தலை நகரம் மதுரையாய் இருந்தமையானும், காஞ்சித்திணையைப் பற்றி ஆசிரியர் கூறினமையானும், இந்நூலிற்கு இப்பெயர் வந்ததென்பர். ஈண்டு மதுரையின் சிறப்பும், ஐந்திணைகளின் வர்ணனையும், அப்பாண்டியனின் முன்னோரின் பெருமையும் முதலியன நன்கு வர்ணிக்கப்பட்டன. இங்கு 782 அடிகள் உள்ளன.

நெடுநல்வாடை : இந்நூலை நக்கீரனார் பாடினர். பாண்டியன் நெடுஞ்செழியன் வாடை (வடக்கு திசையிலிருந்து அடிக்கும் காற்று) வீசும் ஐப்பசி கார்த்திகை மாதங்களில் போகம் வேண்டிப் பொதுச்சொற் பெறுது பகைமேற் சென்றனன். அப்போது அவன் தலைவி அவன் பிரிவை ஆற்றுளாக, வெற்றியோடு அவன் வருவதற்குத் துர்க்கையை அவள் வழிபடுகின்றுள். அக்காலம் நீண்டகாலமாக அவட்குத் தோன்றிய காரணத்தானும், அவன் வெற்றியுடன் வந்தமை

யாலும், அக்காலம் வாடை வீசுங் காலமாதலானும் இந்நூலிற்கு இப்பெயர் இடப்பட்டது என்பர். ஈண்டு 188 அடிகள் இருக்கின்றன.

குறிஞ்சிப்பாட்டு : இதனைப் பாடியவர் கபிலர். இந் நூலுள் தலைவனுக்கும் தலைவிக்கும் ஒத்த அன்பு தோன்றிப் பலநாள் இருவரும் களவில் இருக்க, தலைவியின் வேற்றுமையைக் கண்டு வருந்துஞ் செவிலித்தாய்க்குத் தோழி உண்மையைக் கூறுகின்றாள். குறிஞ்சித்திணையைப்பற்றி இந்நூல் கூறுதலின், இதற்கு இப்பெயர் வந்தது. ஈண்டு 261 அடிகள் உள்ளன.

பட்டினப்பாலை : இதனைப் பாடியவர் கடியலூர் உருத்திரங் கண்ணனார். ஒரு தலைவன் வேற்றுநாட்டிற்குப் போகத் தலைப்பட்டான்; அப்போது தலைவியோடு பிரிவு நிகழும் என வருந்தினான்; அக்காலத்துத் தன் உள்ளத்தை நோக்கி, தலைவியைப் பிரிந்து தான் தனியனாக வரமாட்டேன் எனக் கூறுகின்றான். அப்போது காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பைப் பற்றியும், சோழன் கரிகாற்பெருவளத்தானின் வீரம், செங் கோன்மை முதலியவற்றைப்பற்றியும் வருணிக்கின்றான். இந்நூலுள் பட்டினத்தின் சிறப்பும், பிரிவை உரிப்பொருளாகக் கொண்ட பாலைத்திணையும் உணர்த்தப்படுகின்றமையான் இதற்கு இப்பெயர் வந்தது என்பர். பதினாறுலட்சம் பொற்காசு கொடுத்து இந்நூலைக் கரிகாற்பெருவளத்தான் கொண்டதாகக் கூறுவர். ஈண்டு 301 அடிகள் இருக்கின்றன.

மலைபடுகடாம் : இதற்கு மற்றொரு பெயர் கூத்தராற்றுப் படை என்பது. இந்நூலை இரணியமுட்டத்துப் பெருங்குன் றூர்ப் பெருங்கௌசிகனார் பாடினர். வருணிக்கப்பட்ட புரவலன் பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மாத்துவேள் நன்னன்சேய் நன்னன். ஈண்டுப் பரிசில் பெற்ற கூத்தன் ஒருவன் பரிசில் பெறாத மற்றொரு கூத்தனை ஆற்றுப்படுக்கின்றான். ஈண்டு நன்ன னின் ஆற்றல், வள்ளன்மை முதலியனவும், அவனது காடு மலை சோலை இவற்றின் சிறப்பும், நவிரமலையில் வீற்றிருக்கும் சிவபெரு மானின் மஹிமையும் இவைபோன்றனவும் வருணிக்கப்படு கின்றன. இந்நூலுள் ‘மலைபடுகடாம் மாதிரத்தியம்ப’ என்ற ஓரடி உள்ளது. அங்கு மலைபடுகடாம் என்பதற்கு மலைகள் போன்ற யானைகளிடத்தில் உண்டாம் ஓசை எனப் பொரு ளாகும். இச்சொல் இங்குத் தோன்றுவதன் காரணமாக இந் நூலிற்கு மலைபடுகடாம் என்ற பெயரும், ஒரு கூத்தர் மற்றொரு கூத்தரை ஆற்றுப்படுத்தலின் கூத்தராற்றுப்படை என்ற பெய ரும் வந்தன எனல் தகும். ஈண்டு 583 அடிகள் உள்ளன.

3

எட்டுத்தொகை: இவை நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம். பற்பல காலத்தில் வாழ்ந்திருந்த பற்பல கவிகளால் அகம் புறம் இவற்றைப்பற்றிப் பாடப்பட்ட பாட்டுக்கள் எங்கு தொகுக்கப்பட்டு இருக்கின்றனவோ அவை தொகைநூல்கள் ஆகும். இவ்வெட்டனுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு இவ்வாறும் அகத்தைப்பற்றியன; பதிற்றுப்பத்தும் புறநானூறும் புறத்தைப்பற்றியன. பரிபாடல், கலித்தொகை இவ்விரண்டனைத் தவிர்த்து ஏனைய ஆறும் அகவற்பாவில் இணைக்கப்பட்டன; பரிபாடல் பரிபாடலினும், கலித்தொகை கலிப்பாவிலும் இணைக்கப்பட்டன.

நற்றிணை: இங்கு 400 செய்யுட்கள் உள்ளன. ஒவ்வொரு செய்யுளினும் உள்ள அடிகளின் எண்ணிக்கை ஒன்பதற்குக் குறையாமலும் பன்னிரண்டற்கு மேலாகாமலும் இருக்கின்றது. ஈண்டுள்ள செய்யுட்கள் ஔவையார், கபிலர், பரணர் முதலிய 175 கவிகளாற் பாடப்பட்டன.

குறுந்தொகை: இங்கும் 400 செய்யுட்கள் உள. அவற்றிற்குச் சிற்றெல்லை நாலடி, பேரெல்லை எட்டடி. இவை நற்றிணை அகநானூறு இவ்விரண்டினுள்ள செய்யுட்களைக் காட்டினும் அடிகளிற் குறுகினமையான், இந்நூல் இப்பெயரைப் பெற்றது. இதனைப்பாடிய புலவர் 206 ஆவர். அவருள் மிகுதியான பாடல்களைப் பாடியவர் ஔவையார், கபிலர், பரணர் இம்மூவரே.

ஐங்குறுநூறு: ஒவ்வொரு திணையைப்பற்றியும் இங்கு நூறு செய்யுட்கள் உள. ஈண்டுச் சிற்றெல்லை மூன்று அடிகள், பேரெல்லை ஆறு. அக்காரணம்பற்றியே இந்நூல் இப்பெயர் பெற்றது என்னலாம். மருதத்திணையை ஓரம்போகியாரும், நெய்தலை அம்மூவனாரும், குறிஞ்சியைக் கபிலரும், பாலையை ஓதலாந்தையாரும், முல்லையைப் பேயனாரும் பாடினர். கடவுள் வாழ்த்து பெருந்தேவனாராற் பாடப்பட்டது.

பதிற்றுப்பத்து: இப்பெயரானே இந்நூலுள் 100 செய்யுட்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை. தற்போது தொடக்கத்திற் பத்து செய்யுட்களும் இறுதியிற் பத்து செய்யுட்

களும் கிடைத்தில. ஒவ்வொரு பத்தும் ஒரே கவியால் இயற்றப் பட்டன. அப்பத்து கவிகளுள் கபிலரும் பரணரும் இருவர் ஆவர். ஈண்டுப் பாடப்பட்டோர் சேரவரசர் பதின்மர். இந் நூலால் சேரநாட்டின் பழைய வழக்கங்களும், சேரமன்னரின் ஆட்சிமுறை, வீரம், கொடை முதலியனவும், அவரோடு பழகிய குறுநில மன்னரின் நிலையும் இவைபோன்ற பலவும் அறியப் படுகின்றன.

பரிபாடல் : இங்கு உள்ள செய்யுட்களெல்லாம் பரிபாடல் என்னும் பாவால் இணைக்கப்பட்டமையான், இந்நூல் இப்பெயர் பெற்றது. இதனுள் 70 பாடல்கள் இருந்தன என்பதும், அவற் றுள் 8 திருமாலுக்கும் 31 முருகனுக்கும் 1 காடுகிழாளுக்கும் 26 வையையாற்றிற்கும் 4 மதுரைக்கும உரியன என்பது ஒரு பழைய வெண்பாவால் அறியக்கிடக்கின்றது. ஆனால் சுமார் 26 பாடல்களே இப்போது அச்சில் இருக்கின்றன. இந்நூலி லிருந்து மதுரை, வையையாறு, திருப்பரங்குன்றம், திருமாலிருஞ் சோலைமலை முதலியவற்றின் பண்டைக்காலநிலைமையும், முரு கனின் உற்பததியும், தமிழ்நாட்டில் வழங்கிய வைதிகவொழுக் கங்களும் நன்கு அறியப்படுகின்றன. வடமொழியிலுள்ள உபநிஷத்து மஹாபாரதம் முதலிய நூல்களிற் பயிற்சியிருந்தா லன்றி ஈண்டு பல்லிடங்களிற் பொருள் விளங்காது. இப்பாடல் களைப் பாடியோர் ஆசிரியனல்லந்துவனார், இளம்பெருவழுதி யார், கடுவனிளவெயினனார், கரும்பிள்ளைப்பூதனார், கீரந்தையார், குன்றம்பூதனார், கேசவனார், நப்பண்ணனார் முதலியோர் ஆவர். இப்பாடல்கட்கு இசைவகுத்தோர் கண்ணகனார், கேசவனார், நல்லச்சுதனார், நாகனார் முதலியோர்.

கலித்தொகை : இங்கு இருக்கும் பாடல்கள் கலிப்பாவால் இணைக்கப்பட்டமையால் இந்நூல் இப்பெயர் பெற்றது. அவை யொத்தம் 150. ஐந்து திணைகளைப்பற்றியன. பாலையைப்பற்றிய 35 பாடல்களும் பெருங்கடுங்கோவாலும், குறிஞ்சியைப்பற்றிய 29 பாடல்களும் கபிலராலும், மருதத்தைப்பற்றிய 35 பாடல் களும் மருதனிளநாகனாராலும், முல்லையைப்பற்றிய 17 பாடல் களும் நல்லுருத்திரனாராலும், நெய்தலைப்பற்றிய 33 பாடல்களும் நல்லந்துவனாராலும் பாடப்பெற்றன. கடவுள்வாழ்த்தினை நல்லந்துவனாரே பாடினார். அவரே இந்நூலைத் தொகுத்தவரும் ஆவர்.

அகநானூறு: ஈண்டு 400 செய்யுட்கள் உள. அவற்றிற்கு 13 அடி சிறுமெல்லை, 31 பேரெல்லை. தொகைநூல்களில் அகவற் பாவைக் கொண்ட அகத்தைப்பற்றிய நூல்களிலுள்ள செய்யுட் களுள் இங்கு உள்ளனவே அதிக அடிகளை உடையன. இக்

காரணம்பற்றியே இந்நூலிற்கு நெடுந்தொகை என்ற மற்றொரு பெயரும் உண்டு. இங்கிருக்கும் பாடல்களை இயற்றிய புலவர்கள் 145. அவருள் பரணர் 34 பாடல்களையும், மாமூலனார் 27 பாடல்களையும், மதுரை மருதனிளநாகனார் 23 பாடல்களையும், கபிலர் 18 பாடல்களையும், நக்கீரனார் 17 பாடல்களையும், ஔவையார் 4 பாடல்களையும் பாடியுள்ளனர். இந்நூலைத் தொகுத்தவர் மதுரை உப்பூரிகுடிகிழான் மகனார் உருத்திரசன்மன். இதற்குக் கடவுள்வாழ்த்து பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார். ஐந்திணையைப்பற்றிய செய்யுட்கள் ஈண்டு ஒருமுறையாய்த் தொகுக்கப்பட்டன. ஒற்றைப்படைச் செய்யுட்களெல்லாம் பாலைத்திணை: 2, 12, 22, 32, 42, ..., 8, 18, 28, 38, 48, ... இவையெல்லாம் குறிஞ்சித்திணை; 4, 14, 24, 34, 44, ... இவையெல்லாம் முல்லைத்திணை; 6, 16, 26, 36, 46, 56, ... இவையெல்லாம் மருதத்திணை; 10, 20, 30 .... இவையெல்லாம் நெய்தற்றிணை.

புறநானூறு: கடவுள்வாழ்த்தைச் சேர்த்து ஈண்டு 400 செய்யுட்கள் உள. அவையெல்லாம் அகவற்பாவிலே அமைந்துள்ளன. புறத்தைப்பற்றி இச்செய்யுட்களெல்லாம் பாடப்பட்டமையான், இந்நூலிற்குப் புறநானூறு, புறம்புநானூறு, புறப்பாட்டு, புறம் என்ற பெயர்கள் வழங்குகின்றன. கடவுள் வாழ்த்து பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப்பட்டது. இப்பாடல்களைச் சுமார் 160 கவிகள் பாடியுள்ளனர். அவருள் சிலர் பெண்மணிகள்; சிலர் அரசர்; மிகுதியாகப் பாடியவருள் சிறந்தோர் கபிலரும் ஔவையாரும் பரணரும் ஆவர். சங்கத் தமிழின் தன்மையை அறிய முதன்முதலில் இந்நூல் படித்தல் தகும். இங்குள்ள செய்யுட்களில் திணை துறை வகுத்த உரைகாரர் புறப்பொருள்வெண்பாமாலையைப் பின்பற்றினரேயன்றித் தொல்காப்பியத்தைப் பின்பற்றவில்லை. இந்நூலிலுள்ள இரண்டாம் பாட்டினை முரஞ்சியூர் முடிநாகராயர் இயற்றியதாகக் கூறப்பட்டது. அவர் தலைச்சங்கத்தவர் எனச் சிலர் கூறுவர். ஆனால் தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டவர் அவர் என்பது நீ நிலீஇயர் என்ற அவரது சொற்றொடரால் அறியக் கிடக்கின்றது. அக்காரணம்பற்றியே கடைச்சங்கநூலாகக் கூறப்படும் இந்நூலுள் அவரது பாட்டு தொகுக்கப்பட்டது என்னலாம். இப்பாடல்களைத் தொகுத்தவர் யார் என்பது அறியப்படவில்லை.

4

பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் ஆவன: திருக்குறள், நாலடியார், பழமொழி, திரிகடுகம், நான்மணிக்கடிகை, சிறுபஞ்ச

மூலம், ஏலாதி, ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி, களவழிநாற்பது, இனிதுநாற்பது, இன்னாநாற்பது, திணைமாலைநூற்றைம்பது, ஐந்திணையெழுபது, கைந்நிலை, ஐந்திணையைம்பது, திணைமொழியைம்பது, கார்நாற்பது.

திருக்குறள்: ஆசிரியர் திருவள்ளுவர் இந்நூலை இயற்றினர். ஈண்டு 1330 குறள்கள் உள்ளன. அவற்றுள் முதல்நாற்பதும் — கடவுள்வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார்பெருமை, அறன் வலியுறுத்தல் — இவற்றுள் அடங்கின. அவற்றின் பின்னர் 160 குறள்கள் இல்லறத்தைப்பற்றியும், 170 துறவறத்தைப்பற்றியும், 10 ஊழைப்பற்றியும், 700 தர்மம் காமம் மோக்ஷம் இவற்றைத் தவிர்த்த உலகிலுள்ள பொருள்களைப்பற்றியும், இறுதியில் 250 காமத்தைப்பற்றியும் உள்ளன. மஹாபாரதத்தில் தர்மத்தை ப்ரவிருத்திதர்மம், நிவிருத்திதர்மம் என வ்யாஸர் பிரித்தவாறே, ஈண்டு இவ்வாசிரியர் அறத்தை இல்லறம், துறவறம் எனப் பிரித்தனர். மோக்ஷத்தின் ஸ்வரூபத்தைக் கடவுள்வாழ்த்து, அவாவறுத்தல் இவற்றில் உணர்த்தினர்.

நாலடியார்: இதற்கு நாலடிநானூறு என்ற மற்றொரு பெயரும் உண்டு. ஈண்டு 400 வெண்பாக்கள் உள. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என முப்பிரிவினை உடையது. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என இருபகுதிகளாக பிரிக்கப்பட்டுளது. இவ்விரண்டிலும் முறையே 70, 60 செய்யுட்கள் இருக்கின்றன. பொருட்பாலில் 240 செய்யுட்களும், காமத்துப்பாலில் 30 செய்யுட்களும் உள்ளன. இவற்றுள் பல ஜைனவாசிரியரால் செய்யப்பட்டு தொகுக்கப்பட்டன. திருக்குறளில் உள்ள பல கருத்துக்கள் இங்குங் காணப்படுகின்றன.

பழமொழி: இந்நூலைப் பாடியவர் முன்றுறையரையனார். அவர் ஒரு ஜைனர். இங்கு 400 செய்யுட்கள் உள. பெரும்பாலும் திருக்குறளிற் காணப்படும் கருத்துக்களே ஈண்டுக் காணப்படுகின்றன. ஒவ்வொரு செய்யுளிலும் திருக்குறளிற் கண்ட கருத்து ஒன்றையும் அதற்கு உபமானமாகக் கருத்து மற்றொன்றையும் இணைத்திருக்கின்றனர். அக்கருத்துக்கள் பிற்காலத்திற் பழமொழிகளாக வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு பழமொழி இருத்தலானும், ஈண்டு 400 செய்யுட்கள் இருத்தலானும், இந்நூலிற்குப் பழமொழிநானூறு என்ற மற்றொரு பெயரும் உண்டு.

திரிகடுகம்: சுக்கு திப்பிலி மிளகு இம்மூன்றாற் செய்யப்பட்ட சூர்ணத்திற்குத் திரிகடுகம் எனப் பெயர். அதுபோன்று

மும்மூன்று விஷயங்கள் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படு கின்றமையான், இந்நூலிற்கு இப்பெயர் வந்தது. இதனை இயற்றியவர் நல்லாதனார். ஈண்டு 100 செய்யுட்கள் உள்ளன. அவற்றுள் பின்னிருப்பது ஒன்று :—

அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியுஞ்—சொல்லின்
அரியகற் றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து. (1)

நான்மணிக்கடிகை : நாலு மணிகளால் ஆக்கப்பட்ட மாலை போன்று, இங்கு ஒவ்வொரு செய்யுளும் நான்கு விஷயங்களைக் கொண்டன. அக்காரணம் பற்றியே இந்நூலிற்கு இப்பெயர் வந்தது. இதனை ஆக்கியோர் விளம்பிநாகனார் ஆவர். ஈண்டுக் கடவுள்வாழ்த்தினை நீக்கி 100 செய்யுட்கள் இருக்கின்றன. அவற்றில் பின்னருள்ளது ஒன்று :—

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு. (20)

இந்நூலாசிரியர் தெரிவு (தெளிந்த அறிவு) பொய்யாவித்து (முக்திக்குக் காரணம்) என்று கூறுகின்றமையால், (செய். 73) இவர் அத்வைதக்கொள்கையைக் கொண்டனர் எனல் தகும்.

சிறுபஞ்சமூலம் : கண்டங்கத்திரிவேர், சிறுவழுதுணைவேர், சிறுமல்லிவேர், நெருஞ்சிவேர், பெருமல்லிவேர் இவ்வைந்தும் சிறுபஞ்சமூலம் எனப்படும். இந்நூலில் ஐந்தைந்து செய்திகள் ஒவ்வொரு செய்யுளிலும் இணைக்கப்பட்டமையான், இஃது இப்பெயர் பெற்றது. ஈண்டு 105 செய்யுட்கள் உள. இதனை இயற்றிய காரியாசான், சிறுபஞ்சமூலத்தாற் செய்யப்பட்ட மருந்து ஸ்தூலசரீரத்துள்ள பிணிகளைப் போக்குவதுபோல் ஈண்டுள்ள செய்யுட்கள் ஸூக்ஷ்மசரீரப்பிணியைப் போக்கும் என்கிறார் :—

ஒத்த வொழுக்கங் கொலைபொய் புலால்களவோடு
ஒத்த விவையல வோர்நாலிட்—டொத்த
உறுபஞ் சமூலந் தீர்மாரிபோற் கூறீர்
சிறுபஞ் சமூலஞ் சிறந்து. (2)

ஏலாதி : ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, மிளகு, திப்பிலி, சுக்கு இவ்வாறினாற் செய்யப்பட்ட சூர்ணத்திற்கு ஏலாதி எனப்

பெயர். அதுபோன்று இந்நூலுள் ஒவ்வொரு செய்யுளினும் ஆறு பொருள்கள் கூறப்பட்டமையான், இஃது இப்பெயர் பெற்றது. இதனைக் கணிமேதாவியார் என்ற ஜைனர் இயற்றினர். கடவுள்வணக்கத்துடன் ஈண்டு 81 செய்யுட்கள் உள. அவற்றுள் பின்னருள்ளது ஒன்று :—

கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதிமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

ஆசாரக்கோவை : மக்கள் பொதுவாகப் பெரியோரிடமும் அரசரிடமும் ஏனைய மக்களிடமும் எவ்வாறு நடக்கவேண்டும் என்பதையும் சிற்சில வேதநெறிகளையும் இந்நூல் கூறும். இதனை இயற்றியவர் கயத்தூர் பெருவாயின்முள்ளியாசிரியர். இங்கு 100 செய்யுட்கள் உள. ஓரிடத்தில், பெற்ற தாய், உடன்பிறந்தாள், மகள் இவரோடுங் கூட ஒருவன் தனித்திருத்தல் தகாது எனக் கூறுகின்றனர்.

ஈன்றாண் மகடன்னுடன் பிறந்தாளாயினும்
சான்றோர் தமித்தா வுறையற்க வைம்புலனும்
தாங்கற் கரிதா கலான். (57)

முதுமொழிக்காஞ்சி : இதனை இயற்றியவர் மதுரை கூடலூர் கிழார். உறுதிப்பொருள்களைப்பற்றிய 100 முதுமொழிகள் பப்பத்தாகக் கூறப்பட்டன. அவை பெரும்பாலும் ஓரடியில் உள்ளன.

ஆர்கலி யுலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலின் சிறந்தன் றொழுக்க முடைமை

என்பது முதல் முதுமொழி.

களவழிநாற்பது : இதனைப் பாடியவர் பொய்கையார். சோழன், செங்கணான், சேரமான் கணைக்காலிரும்பொறையைத் தோல்வியுறச் செய்த போர்க்களனைப்பற்றி வர்ணிக்கும் இந்நூல். ஈண்டு 40 செய்யுட்கள் உள. இவற்றால் இந்நூற்பெயரின் காரணம் இனிது விளங்கும்.

இனிதுநாற்பது : ஈண்டு இனிது என்ற சொல்லைக் கொண்டு நாற்பது செய்யுட்கள் உள்ளன. இதனால் இந்நூற்பெயரின் காரணம் விளங்கும். இதனை இயற்றியவர் பூதன் சேந்தனார். இவர் கடவுள்வாழ்த்தில் மும்மூர்த்தியை வணங்குகின்றனர்.

இன்னாநாற்பது: இங்கு இன்னா என்ற சொல் ஒவ்வொரு செய்யுளிலும் உளது. கடவுள்வாழ்த்தைத் தவிர்த்து 40 செய்யுட்கள் உள்ளன. இவற்றால் இந்நூலிற்கு இப்பெயர் என் இடப்பட்டது என்பது தோன்றும். இந்நூலைக் கபிலர் இயற்றினர். அவர் மும்மூர்த்தியையும் முருகனையுங் கடவுள்வாழ்த்தில் வணங்கினர்.

திணைமாலைநூற்றைம்பது: அகத்திணை ஐந்திணையும்பற்றிய 150 செய்யுட்கள் ஈண்டு உள. மூன்று செய்யுட்கள் பின்னர்ச் சேர்க்கப்பட்டனவா என்பது ஆராய்தற்குரியது. இந்நூலாசிரியர் கணிமேதாவியார் ஆவர்.

ஐந்திணையெழுபது: அகத்திணை ஒவ்வொன்றிற்கும் 14 செய்யுட்களாக ஐந்து திணைகளைப்பற்றிக் கூறும் இந்நூல். இதனை இயற்றியவர் மூவாதியார்.

கைந்நிலை: அகத்திணை ஒவ்வொன்றிற்கும் 12 பாடல்களாக, ஐந்து திணைகளைப்பற்றியே கூறும் இந்நூலும். இதனை இயற்றியவர் மாறோகத்து முள்ளிநாட்டு நல்லூர்க்காவிதியார் மகன் புள்ளங்காடனார்.

ஐந்திணையைம்பது: ஈண்டும் அவ்வாறே அகத்திணைகள் ஐந்தும் உணர்த்தப்பட்டன. ஈண்டு 50 பாடல்கள் உள. இந்நூலாசிரியர் மாறம்பொறையனார் ஆவர்.

திணைமொழியைம்பது: கண்ணஞ்சேந்தனார் அகத்திணை ஒவ்வொன்றிற்கும் பத்து பாடலாக ஐம்பது பாடல்களை ஈண்டுப் பாடியுள்ளார்.

கார்நாற்பது: இந்நூலாசிரியர் மதுரைக்கண்ணங்கூத்தனார். ஈண்டு 40 செய்யுட்கள் உள. அவை கார்காலத்தின் தன்மையை வர்ணிக்கின்றன. போர்க்குச் சென்றிருக்கும் கணவன், வீட்டிலுள்ள மனைவி, தோழி இவருடைய கூற்றுக்கள் இங்குக் காணப்படுகின்றன. ஆகலின் முல்லைத்திணையைப் பற்றியது இந்நூல். இங்குத் திருமாலையும் பலராமனையும் உபமானமுகமாய் ஆசிரியர் குறிக்கின்றனர்.

இப்பதினெட்டு நூல்களுள் முன்னர்ப் பன்னிரண்டும் பெரும்பாலும் புறத்தையும் சிறுபான்மை அகத்தையும் பற்றியன. பின்னருள்ள ஆறும் அகத்தையே பற்றியன. அவற்றுள் சில நூல்கள் பிற்காலத்தன என்பர் சிலர்.

---

ii. வைதிகமார்க்கம்

(1) வேதங்களும் அங்கங்களும்

இப்பரதநாட்டில் பல்லாயிரம் ஆண்டுகளாகக் குரு முகமாகவே கற்கப்பட்டு வரும் நூல் வேதம் ஆகும். அது நால்வகைப்படும் என்பதை முரஞ்சியூர் முடிநாகராயர் **நால்வேத நெறிதிரியினும்** (புறநா. 2) என்னுமிடத்தும், நெட்டிமையார் **நால்வேதத்து** (புறநா. 15) என்னுமிடத்துங் குறிக்கின்றனர். அவை ருக்வேதம், யஜுர்வேதம், ஸாமவேதம், அதர்வ வேதம் ஆகும். அதர்வவேதத்திற்கு ஆதர்வணவேதம், அதர்-வாங்கிரஸ், ப்ருகுவிஸ்தரம், ப்ருக்வங்கிரஸம் என்ற பெயர்களும் உள. வேதம் என்பது **மந்திரத்தையும், பிராம்மணத்தையுங்** குறிக்கும். தேவதைகளை விளித்தற்கு வழங்கப்படும் வேதப் பகுதி மந்திரம் எனப்படும். பிராம்மணங்கள் அவற்றிற்கு உரை போன்றவை. ஒவ்வொரு வேதத்திலும் பல ருஷிகளாற் காணப்பட்ட மந்திரங்கள் தொகுக்கப்பட்டுள்ளன. அத் தொகைநூலிற்கு **ஸம்ஹிதை** என்று பெயர். ருக்மந்திரங்கள் ருக்வேதஸம்ஹிதையிலும், யஜுர்மந்திரங்கள் யஜுர்வேத ஸம்ஹிதையிலும், ஸாமமந்திரங்கள் ஸாமவேதஸம்ஹிதையிலும், அதர்வமந்திரங்கள் அதர்வவேதஸம்ஹிதையிலுங் காணப்படுகின்றன.

ருக்மந்திரங்கள் ருக்ரூபமாய் உள்ளன. ருக் என்பதை **வைதிகச்செய்யுள்** என்னலாம். யஜுர்மந்திரங்கள் யஜுஸ் ரூபாய் உள்ளன. யஜுஸ் என்பதை **வைதிகவசனம்** என்னலாம். ஸாமமந்திரங்கள் ஸாமரூபமாய் உள்ளன. ஸாம என்பதை **வைதிககீதம்** என்னலாம். அதர்வமந்திரங்கள் பெரும்பாலும் ருக்ரூபமாகவே உள்ளன.

ஒவ்வொரு வேதத்திலும் பிராம்மணங்கள் பெரும்பாலும் வசனநடையிலே இருக்கும். அவற்றின் முதற்பகுதி மந்திரங்களின் பொருள், விநியோகம் (வழங்கப்படும் இடம்) முதலியவற்றைக் கூறும். இரண்டாம்பகுதி வானப்பிரஸ்தர்களின் கர்மத்தைக் கூறும். ஆகலின் அதனை **ஆரண்யகம்** எனவுங் கூறுவர். மூன்றும்பகுதி, ஒருவன் ஆசிரியனை அடைந்து ஆன்மாவின் ஸ்வபாவத்தை அறிந்து மோக்ஷத்தைப் பெறும் உபாயத்தைக் கூறும். அதற்கு **உபநிஷத்** என்ற பெயரும் உண்டு. உபநிஷத்துக்கள் பல உள்ளன. அவற்றுள் எட்டு,

பத்து சிறந்தன ஆகும். ஈசாவாஸ்யம், கடோபநிஷத், முண்டகம் இவைகள் செய்யுள்வடிவத்தைக் கொண்டன. எஞ்சியவை பெரும்பாலும் வசனநடையில் உள்ளன. ஈசாவாஸ்யம் சுக்லயஜுர்வேதஸம்ஹிதையின் இறுதிப்பகுதியாதலின், அதனை மந்திரோபநிஷத் என்றுஞ் சொல்வது உண்டு. வேதங்களில் யாகம் முதலிய கர்மாக்களைக் கூறும் பகுதிக்குக் கர்மகாண்டம் என்றும், ஞானத்தைப்பற்றிக் கூறும் பகுதிக்கு ஞானகாண்டம் என்றும் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வேதங்கள் குருமுகமாகவே கற்கப்பட்டு வந்தமையால், ஆங்கு வழங்கப்பட்ட சொற்கள் பிழைபடாது இருத்தல் வேண்டும். அச்சொற்கள் எழுத்துக்களால் ஆக்கப்பட்டமையான், எழுத்திலக்கணம் இயற்றுதல் இன்றியமையாததாயிற்று. அவ்வெழுத்திலக்கணத்தை, சிக்ஷா என்றனர். அதனுள் எழுத்திலக்கணத்தின் வகை, பிறப்பு, புணர்ச்சியில் அவற்றிற்கு நேரும் மாறுதல்கள் இவை உணர்த்தப்படும்.

சொற்கள் பகுதி விகுதி இவற்றால் ஆக்கப்பட்டமையான், அவற்றின் தன்மையை அறிவிக்கச் சொல்லிலக்கணம் வேண்டியதாயிற்று. இதனை வ்யாகரணம் என்பர்.

ருக்வேதஸம்ஹிதை, அதர்வவேதஸம்ஹிதை, கடோபநிஷத் முதலியன செய்யுள்வடிவங் கொண்டமையாலும், செய்யுட்கள் பல வகையாக இணைக்கப்பட்டமையாலும், செய்யுளிலக்கணம் வேண்டிய தாயிற்று. இதனை, சந்தஸ் என்பர்.

சொற்களின் பொருள் நன்கு விளங்காவிடின், வேதப் பொருளை நன்கு அறிதல் இயலாது. பொருளின் அறிவு இல்லையேல், அநுபவித்து மந்திரங்களை வழங்குதல் இயலாது. ஆகலின் வைதிகசொற்களின் பொருளை விளக்க நூல் வேண்டியதாயிற்று. அந்நூலிற்கு நிருக்தம் எனப் பெயர்.

வேதத்தில் உணர்த்தப்பட்ட கர்மாக்கள் குறிப்பிட்ட காலங்களிற் செய்யப்படவேண்டும் என ஆங்கே கூறப்பட்டுளது. அவ்வக்காலத்தை அறிய வானநூலின் இன்றியமையாமை தோன்றியது. அந்நூலிற்கு ஜ்யோதிஷம் எனப் பெயர்.

வேதத்திற் குறிக்கப்பட்ட யாகங்களை எளிதிற் செய்ய ஒவ்வொரு யாகத்திலும் தொடக்கம் முதல் இறுதிவரையிற் செய்ய வேண்டியவற்றைத் தனிநூல்களிற் கூறின் எளிதாயிருக்கும் என

நினைத்து அவற்றை ருஷிகள் இயற்றினர். அவற்றைக் கல்ப ஸூத்ரம் என்ற பெயரால் அழைத்தனர். முதன்முதலில் யாகங் களைப்பற்றிக் கூறும் நூலிற்குக் கல்பஸூத்ரம் என்ற பெயர் இருந்திருப்பினும், பின்னர் விவாஹாக்னியிற் செய்யப்படும் கர்மாக்களைக் கூறும் க்ருஹ்யஸூத்ரங்கட்கும் பொதுதர்மங் களைக் கூறும் தர்மஸூத்ரங்கட்கும் அப்பெயர் பொதுவாய் வழங்கப்பட்டது. அக்காரணம்பற்றி யாகங்களைப்பற்றிய நூல் களுக்கு ச்ரௌதஸூத்ரம் எனப் பின்னர்ப் பெயரிட்டிருத்தல் கூடும்.

சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் இவ்வாறிற்கும் வேதாங்கங்கள் என்ற பெயர் வந்தது.

வைதிகசிக்ஷைக்கு ப்ராதிசாக்யம் என்ற பெயரும் உண்டு. வேதங்களில் ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு சிக்ஷை இருந் திருத்தல் வேண்டும் என்பது ப்ராதிசாக்யம் என்ற பெயரானே அறியக்கிடக்கின்றது. ஆயினும் தற்போது சிற்சில ப்ராதி சாக்யங்களே வழக்கில் உள்ளன.

சாகை என்றால் என்ன? சாகை என்பதற்குக் கிளை என் பது பொருள். ஒவ்வொரு வேதமும் பற்பல ருஷிகளால் தத்தங் குடும்பத்தில் அத்தியயனஞ் செய்யப்பட்டது. அத்தியயனஞ் செய்யப்பட்ட மந்திரங்கள் பின்னர்த் தொகுக்கப்பட்டன. அவற்றுள் ஒலிக்குமுறை தொகுக்குமுறை முதலியவற்றிற் சிறிது மாறுபாடு ஏற்பட, ஒவ்வொன்றையும் ஒவ்வொரு சாகை என்றனர். ருக்வேதத்தில் 21 சாகைகளும், யஜுர்வேதத்தில் 101 சாகைகளும், ஸாமவேதத்தில் 1000 சாகைகளும், அதர்வ வேதத்தில் 9 சாகைகளும் இருந்தன என்பது பதஞ்சலி முனிவர் இயற்றிய மஹாபாஷ்யம் முதலிய நூல்களிலிருந்து அறியப்படு கின்றது. தற்போது வழக்கில் உள்ளவை மிகச்சிலவே ஆகும்.

வைதிகவ்யாகரணங்கள் குறைந்தது எட்டாவது இருந் திருத்தல் வேண்டும்; ஏனெனில் பாணினியாசிரியரின் இலக் கணம் ஒன்பதாவது எனவும், அது வந்தபிறகு மற்றவை இறந்தன எனவும், முன்னோர் கூறுவர். இந்திரனால் ஒரு வ்யாகரணம் இயற்றப்பட்டது என்பது யஜுர்வேதத்திலிருந் தும், ப்ருஹஸ்பதியால் சப்தபாராயணம் என்ற நூல் இயற் றப்பட்டது என்பது மஹாபாஷ்யத்திலிருந்தும் அறியப்படுகின் றன. வேதத்தில் வழங்கப்பட்ட பாஷைக்கும் பாணினியாசிரிய ரது காலத்தில் வழங்கப்பட்ட பாஷைக்கும் பல மாறுபாடுகள்

காணப்பட்டன. முன்னருள்ளதை வைதிகம் என்பர்; பின்ன ருள்ளதைப் பாணினியாசிரியர் பாஷா என்றும், மஹாபாஷ்ய காரர் லௌகிகம் என்றுங் கூறினர். இரண்டற்கும் பொருந்தப் பாணினியாசிரியர் அஷ்டாத்யாயீ என்ற இலக்கணநூல் இயற்றி னர். அவர் ஆங்குக் கொண்டமுறை வியப்பிற்கு வியப்பாய் உளது.

வைதிகசந்தஸ்ஸைப்பற்றித் தைத்திரீயஸம்ஹிதையிலும், சாங்கியாயனச்ரௌதஸூத்திரத்திலும், ஸாமவேதநிதான ஸூத்ரத்திலும், காத்யாயனஸர்வாநுக்ரமணியிலும் சிறிது கூறப் பட்டுளது. அவற்றை விரிவாய்க் கூறும் பழைய நூல் ஒன்றுந் தற்போது காணப்பட்டிலது. பிற்காலத்தில் வழங்கப்பட்ட விருத்தங்களின் இலக்கணத்தையுங்கொண்ட பிங்களரின் சந்தஸ் சாஸ்திரத்தை வேதாங்கநூல் என்கின்றனர்.

நிருக்தநூல்கள் பல இருந்தன என்பது தற்போது வழக்கி லுள்ள யாஸ்கரது நிருக்தத்தால் விளங்கும். அவரது காலத்திற்கு முன்னரே வைதிகமந்திரங்கள் வெவ்வேறு வகையாகப் பொருள் கொள்ளப்பட்டன என்பதும் அவரது காலத்திற் சில சொற்க ளுக்குப் பொருள் விளங்கவில்லை என்பதும் அறியப்படுகின்றன.

ஜ்யோதிஷத்திலும் ஆர்யபடீயத்திற்கு முந்திய நூல்கள் கிடைத்தில.

கல்பஸூத்திரங்களிலும் சிற்சிலவே உள்ளன. முன்னர் இருந்த தர்மஸூத்ரங்களை ஒட்டி மநுஸ்மிருதி முதலிய ஸ்மிருதி நூல்கள் இயற்றப்பட்டன.

வேதங்களின் கர்மகாண்டத்தில் உள்ள வாக்கியங்களின் விசாரத்தை ஜைமினியும், ஞானகாண்டத்தில் உள்ளவற்றின் விசாரத்தைப் பாதராயணவ்யாஸரும் ஸூத்திரரூபமாய் எழு தினர். முன்னதற்குப் பூர்வமீமாம்ஸா என்றும், பின்னதற்கு உத்தரமீமாம்ஸா என்றும் பெயர் இடப்பட்டன.

யுக்தியை முன்னிட்டுப் பொருளை நன்கு அறிதற்கு நியாயஸூத்திரம் கௌதமமுனிவரால் இயற்றப்பட்டது.

உலகத்தில் மக்கள் தர்மத்தை நன்கு அறிய வால்மீகி முனிவர் ராமாயணத்தையும், வியாஸமுனிவர் மஹாபாரதம் புராணங்கள் இவற்றையும் இயற்றினர்.

இவையெல்லாம் வைதிகதர்மத்தை நாம் அறியப் பயன் படும் நூல்கள். இவற்றைப் பதினான்குவித்யை என்பர். (வேதங்கள் 4; அங்கங்கள் 6; மீமாம்ஸை இரண்டுஞ் சேர்ந்து 1; நியாயம் 1; தர்மஸூத்திரங்கள் 1; ராமாயணம், மஹாபாரதம், புராணங்கள் இவையெல்லாம் சேர்ந்து 1.)

(2) மக்கட்பிரிப்பு

மக்கள் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என நால்வகையாகப் பிரிக்கப்பட்டனர். பண்டைக்காலத்தில் மேலே கூறப்பட்டவரை மேற்சாதியர் என்றும், கீழே கூறப் பட்டவரைக் கீழ்ச்சாதியர் என்றும் குறித்திருத்தல் கூடும் என்பது, பிராம்மணன் தன்னைப் பிறரிற் சிறந்தான் என நினைப்பின் உடனே பிராம்மண்யம் போய்விடும் என்ற கௌதமஸூத்ரவாக்கியத்தால் விளங்குகின்றது. ஆயினும் பிற்காலத்தில் முதலிற் கூறப்பட்டோர் சிறந்தோர் என்றும், பின்னர்க் கூறப்பட்டோர் சிறந்திலர் என்றுங் கொள்ளப் பட்டது. இந்நான்கு வருணத்தாருள், முதல் மூன்று வருணத்து ஆண்மக்கட்கும், கீழுள்ள வருணத்து பெண்மக்கட்கும் பிறந்தோர் அநுலோமசாதியர் எனக் கூறப்பட்டனர். மேல் வருணத்துப்பெண்மக்கட்கும் கீழ்வருணத்து ஆண்மக்கட்கும் பிறந்தவர் பிரதிலோமசாதியர் எனக் கூறப்பட்டனர்.

அவருள் பிராம்மணன், க்ஷத்திரியன், வைசியன் இம்மூவரும் உபநயனஞ் செய்விக்கப்பட்டு வேதத்தைக் குருமுகமாகக் கற்பிக்கப்பட்டனர். வேதாத்தியயனஞ் செய்வதால் அவர்கள் ருஷிகளுக்குச் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தியதாகக் கருதப்பட்டனர். பின்னர் அவர்கள் பிரும்மசாரி, ஸந்நியாஸி முதலியோரை உபசரித்து, வந்த விருந்தினரைப் போற்றி, மனைவிமக்களோடு வாழ்ந்தனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஆண்மகனைப் பெற்றால்தான் அவர் பித்ருதேவதைகட்குச் செலுத்தவேண்டிய கடனைச் செலுத்தியதாகக் கருதப்பட்டனர். அதற்காக, ஓர் ஆண்மகன் பிறக்கும்வரை மனைவியின் ருது காலத்திற் கணவன் அவளைச் சேரவேண்டும் என்ற விதி பிறந்தது.

அவரவரது மகன் குடும்பப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளத் தகுந்த நிலையில் வந்ததையும் அவனுக்கு மகன் பிறந்ததையுங் கண்டவுடன் அவர் வானப்பிரஸ்தர் ஆயினர். அந்நிலையில் மனைவி அவரோடு வரின் அவளையுங் கூட்டிச் சென்றனர். அவள் வாராவிடின் அவளை மகனிடம் விட்டுவிட்டுத்

தாமே சென்றனர். இந்நிலையில் அவர் காட்டில் வசித்தனர். அக்னிகார்யம் சிறிது செய்தனர். சண்டாளரைத் தவிர்த்து ஏனைய விருந்தினரைப் போற்றினர். பழம், வேர் இவற்றை உண்டு தவஞ் செய்வதிற் காலத்தைக் கழித்தனர்.

பின்னர் எல்லாப்பிராணிகளும் பரமாத்மஸ்வரூபம் என்ற எண்ணம் திண்ணமாக வந்தபின்னர், அக்னிகார்யத்தை விட்டு, ஸந்நியாஸம் பெற்று, ஆத்மஸ்வரூபத்தை அறிவிக்கத் தகுந்த ஆசிரியனை நாடி, ஆத்மவிசாரஞ் செய்து, மனனம், நிதித்தியாஸனம் செய்து மோக்ஷம் அடைந்தனர். அவருடைய ஜீவன் அவரது உடலைவிட்டு நீங்குவதற்கு முன் மோக்ஷத்தை அடைந்தால், அதனை ஜீவன்முக்தி என்பர்.

(3) மக்கட்டொழில்

பிராம்மணனுக்கு வேதங்களைக் கற்றல், பிறருக்குக் கற்பித்தல், யாகங்களைச் செய்தல், பிறருக்கு அவற்றைச் செய்வித்தல், தானங்கொடுத்தல், அதனைப் பெற்றுக்கொள்ளுதல் என்ற ஆறு தொழில்கள் விதிக்கப்பட்டன. தானத்தை ஏற்கும்போது பணத்தைச் சேர்க்கவேண்டும் என்ற எண்ணமின்றிக் குடும்பச் செலவிற்கு வேண்டியவளவே கொள்ளவேண்டும். முற்காலத்தில் அவன் நான்கு வேதங்களையும் அங்கங்களுடன் கற்றான். ஒவ்வொன்றையும் பன்னிரண்டு ஆண்டுகளில் அத்தியயனஞ் செய்தான்.

க்ஷத்திரியனுக்கு வேதத்தைக் கற்றல், யாகஞ்செய்தல், தானமளித்தல், பிரஜைகளைக் காத்தல், குற்றமறிந்து தண்டித்தல் என்ற ஐந்து தொழில்கள் விதிக்கப்பட்டன. வைசியனுக்கு வேதத்தைக் கற்றல், யாகஞ்செய்தல், தானமளித்தல், பசுவைப் பாதுகாத்தல், உழவு, வியாபாரம் முதலியன செய்தல் இவை விதிக்கப்பட்டன.

சூத்திரனுக்கு உழவு தச்சு முதலிய தொழில்கள், சிற்பம், நாட்டியம், பிராம்மணன் முதலியோர்க்கு வழிபாடு இவை விதிக்கப்பட்டன.

சூத்திரனுக்கு வேதத்தைக் கற்றல் விதிக்கப்படாமையான், அவனுக்கு உபநயனம் இல்லை. ஏனைய மூவர்க்கும் உபநயனம் இருப்பதால், அவர்க்கு த்விஜ: என்றபெயர் உண்டு. அதற்கு இருபிறப்பையுடையோன் என்பது பொருள். இரண்டாவது பிறப்பில் காயத்ரீ தாயாகவும் ஆசிரியன் தந்தையாகவும் இருப்

பார். ஆகலின் காயத்ரீமந்திரத்தை அவர்கள் இடைவிடாது ஜபம் செய்தல் அவசியமாகும். காலை, மத்தியானம், மாலை இம்மூன்று காலங்களிலும் காயத்ரீதேவதையை உபாஸிக்க வேண்டும் என நூல்கள் கூறும். அதனை உபாஸித்தால் பிராம் மணன் அறிவாற் சிறப்பினையும், க்ஷத்திரியன் தேகபலத்தாற் சிறப்பினையும், வைசியன் பொருளாற் சிறப்பினையும் அடைவான். அவரவரிடம் உள்ள பொருள் சிறந்து விளங்கினால்தான் அதனால் அவன் பிறர்க்குப் பயன்படுவான்.

(4) மறுமை

ஒருவன் இறக்கும்போது ஜீவன் பூதவுடலிலிருந்து வெளியே செல்லும்படிச் செய்பவனை யமன் என்று கூறுவர். இறந்த பின்னர் ஜீவன் நல்வினைப்பயனை மாத்திரம் அனுபவிக்கவேண்டு மாயின் ஸ்வர்க்கத்திற்குச் செல்கிறான். தீவினைப்பயனை மாத் திரம் அனுபவிக்க வேண்டுமாயின் நரகத்திற்குச் செல்கிறான். அவன் செல்ல ஸாதனமாயுள்ளது அவன் மகன் செய்யும் ஈமச் சடங்கே ஆகும்.

அன்றியும் பித்ருலோகத்தில் உள்ள தேவதைகட்கு உணவு சிராத்தத்தில் மக்கள் இடும் பிண்டம் முதலியன ஆகும். அக் காரணத்தால் ஒரு ஆண்மகனைப் பெறுதல் பித்ருக்களுக்குத் தீர்க்கவேண்டிய கடன் ஆகும்.

ஸ்வர்க்கத்தில் இருப்பவர் தேவர். அவருடைய அரசன் இந்திரன். அவர்தமக்கு உணவு பூலோகத்தில் மக்கள் செய்யும் ஹோமம். மக்கள் ஒரு தேவதையைக் குறித்து ஒரு பொருளை அக்னியில் ஹோமஞ் செய்தால், அதனை அக்கினி அத்தேவதை யிடம் சேர்ப்பிப்பான். மக்கள் செய்யும் உதவியை நினைத்து தேவர்கள் மக்கட்கு மழையைப் பொழிவிக்கின்றனர்.

தேவர்கட்கும் அஸுரர்க்கும் அடிக்கடி போர் நிகழும். அப்போது தேவர்கள் விஷ்ணுவையும் பிரும்மாவையும் துணை செய்ய வேண்டுவர். தேவதைகட்கு வலுவைக் கொடுப்பது ஸோமரஸம். அதற்காக மக்கள் ஸோமயாகத்தைச் செய்தனர். ஸோமயாகம் எழுவகைப்படும். யாகங்களில் ருத்விக்குகள் பதினாறு பேர். அவருள் சிறந்தவர் ஹோதா, அத்வர்யு, உத்காதா, பிரும்மா என்பவர். ஹோதா தேவதைகளைக் குறித்து மந்திரங்களைக் கூறுவர். அத்வர்யு ஹோமம் முதலியவற்றைச் செய்வர். உத்காதா தேவதைகளைக் குறித்து ஸாமகானஞ் செய் வர். பிரும்மா அவரெல்லாம் பிழையின்றி அவரவருடைய வேலை களைச் செய்கின்றாரா எனக் கவனிப்பர்.

(5) வழிபடுகடவுள்

பிரும்மா, விஷ்ணு, சிவன், துர்க்கை, பலராமன், ஸ்கந்தன், முதலிய தெய்வங்களைப்பற்றி விரிவாய் ராமாயணம், மஹாபாரதம், புராணங்கள் இவை கூறும்.

பிரும்மா : இவர் மஹாவிஷ்ணுவின் கொப்பூழில் தோன்றிய தாமரையிற் பிறந்தவர். அவர்க்கு முகங்கள் நான்கு; அவர் தாமரைமேல் வீற்றிருப்பார்; அவரே உலகத்தைப் படைப்பவர்; அவரைக்குறித்துத் தவஞ்செய்து பலம் அடைந்த அஸுரர் பலர்.

விஷ்ணு : இவர் மூவடிகளால் உலகங்களை அளந்தவர் என ருக்வேதம் கூறும். மஹாபாரதம், புராணங்கள் இவையெல்லாம் பின் உள்ளனவற்றைக் கூறும் :—அஸுரர்கள், ராக்ஷஸர்கள் இவர்களது கொடுமையைத் தாங்கச் செயலற்ற தேவர்களைக் காக்க உலகிற் பல அவதாரங்களை அவர் எடுத்தனர். ப்ரஹ்லாதன் என்ற பக்தனைக் காத்தனர். நீலமேகச்யாமளர். கைகளிற் சங்குச்சக்கரங்களையும் மார்பில் மாலையையும் கொண்டவர். பீதாம்பரத்தை உடுத்தவர் ; புண்டரீகாக்ஷன் ; கருடக்கொடியோன். லக்ஷ்மிக்குக் கணவன். த்ரிபுரத்தைச் சிவன் அழிக்கும்போது தாம் அவர்க்கு அம்பு ஆயினர்.

சிவன் : இவரை முக்கண்ணன், விஷமுண்டோன், நீலகண்டன், சந்திரசேகரன், காலனைக்காய்ந்தவன், பார்வதீபதி, முருகன்றந்தை, ஆலமரத்தடியிலிருப்போன், கைலாஸாதிபதி, த்ரிபுரமெறித்தோன், நால்வேதத்திற் கூறப்படுவோன், விருஷபவாஹனன், பரசுஹஸ்தன், பஞ்சபூதத்திற்குங் காரணமாயிருப்போன் என மஹாபாரதம் முதலிய நூல்கள் கூறும்.

துர்க்கை : இடையூறுகளைப் போக்குவதற்கும் விரும்பியவற்றை அடைதற்கும் மக்கள் இவரை வழிபட்டனர்.

பலராமன் : இவரைப் பால்வண்ணன், நீலாம்பரன், பனைக்கொடியோன், அச்யுதாக்ரஜன் என மஹாபாரதம் முதலிய நூல்கள் கூறும்.

ஸ்கந்தன் : மணம் நிகழ்ந்த பின்னர்ச் சிவபிரானும் பார்வதியும் உல்லாசமாக இருந்தனர். அப்போது அவர்க்கு மகன் உண்டாயின், அவன் உலகத்தையெல்லாம் வென்று தன்னையும் அடக்கிவிடுவான் என்ற பயம் இந்திரனுடைய மனத்தில் தோன்றியது. உடனே பிரும்மாவை முன்னிட்டுக்கொண்டு அவன்

தேவர்களுடன் சிவனிடஞ்சென்று தன் வேண்டுகோளை அறிவித்தனன். சிவனும் உடன்பட்டனர். ஆயினும் ரேதஸ்ஸின் ஒரு பகுதி சிதறி அக்னியில் வீழ்ந்தது. அதனை ஹவிஸ்ஸாகக் கொண்டு ஸப்தருஷிகளும் யாகஞ்செய்தனர். அதன் சேஷத்தை ருஷிபத்தினிகளை உண்ணவேண்டினர். அருந்ததி தவிர மற்ற ஆறு பத்னிகளும் அதனை உண்டு ஆறு குழந்தைகளைச் சரவணத்திற் பெற்றனர். பின்னர் அங்கே அவற்றை விட்டுவிட்டு அவர் தம்மில்லம் சென்றனர். அப்போது சிவனும் பார்வதியும் ஆகாய மார்க்கமாய் வரும்போது பார்வதி அக்குழந்தைகளைப் பார்த்தனள். அவை யாருடையன எனக் கணவனைக் கேட்டனள். அவளுடையனவே அவை என அவர் விடை அளித்தனர். உடனே அவ்விருவரும் கீழே சென்றனர். பார்வதி ஆறு குழந்தைகளையும் மடியில் எடுக்க, அவை ஆறு முகங்கொண்ட ஒரு குழந்தை ஆயிற்று. அக்குழந்தையே தேவருடைய ஸேனைக்குத் தலைவனாய்த் தாரகனை அழித்தது. அக்குழந்தையைப் பார்க்க மும்மூர்த்திகளும் முப்பத்துமூன்று தேவர்களும் வந்து ஒவ்வொருவரும் அவர்க்கு ஒரு விளையாட்டுக்கருவியைக் கொடுத்தனர். இக்கருத்துக்கள் சுருக்கமாய் ராமாயணத்திலும் விரிவாய் மஹாபாரதத்துள்ளுங் காணப்படுகின்றன.

(6) ஊழும் வீடும்

மக்கள் தற்போது அநுபவிக்கும் நன்மைக்கும் தீமைக்கும் அவரவர் முற்பிறப்புக்களிற் செய்த நற்செயலும் தீச்செயலுமே காரணம் ஆகும். ஆதலின் பின்னர் நன்னிலையில் இருக்க வேண்டுமாயின், இப்போதே அவர் நற்செயல்களையே செய்தல் வேண்டும்.

கடவுள் எங்கும் இருக்கிறார். எப்பொருளிலும் ஆதாரமாய் இருக்கும் பொருள் அவரே. அவித்யையால் வெவ்வேறாகத் தோன்றுகிறார். அந்த அவித்யையைப் போக்குவதே மக்கள் கடமை. அவித்யை நீங்கின் ஸ்வப்ரகாசமான பரம்பொருளாகவே ஒவ்வொருவரும் தோன்றுவர். அதற்குப் பெருந்தடையாய் உள்ளது ஆசையே ஆகும். இவ்வாசை தானே நீங்குமாறு ஒவ்வொருவரும் முயலவேண்டும். ஆசை முற்றிலும் ஒழியின் அந்நிலையிலே அவர் முக்தி பெறுவர். அந்நிலை ஜீவன் இப்பூதவுடலில் இருக்கும்போதே நிகழலாம். அதற்கு ஜீவன்முக்தி எனப் பெயர். இக்கருத்துக்கள் விரிவாய் உபநிஷத்துக்களில் உணர்த்தப்படுகின்றன.

---

iii. சங்கநூல்களிற் கூறப்படும் வைதிகமார்க்கம்

(1) வேதங்களும் அங்கங்களும்

நக்கீரனார் இயற்றிய திருமுருகாற்றுப்படையில், இருபிறப்பினர் ஆறு அங்கங்களைக்கொண்ட வேதங்களை நாற்பத்தெட்டு ஆண்டுகளிற் கற்றனர் என்பதை

அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல. (179—182)

என்ற அடிகளாற் குறிக்கின்றனர். ஒருவன் உபநயனம் செய்விக்கப்பட்ட பின்னரே வேதங்களைக் கற்க உரியன் ஆவான்; உபநயனமே அவனுக்கு இரண்டாம் பிறப்பு; அப்போது, காயத்ரீ தாய், ஆசிரியன் தந்தை; நான்கு வேதங்களைக் கற்றல் வேண்டும்; இல்லையேல் மூன்று, இரண்டு வேதங்களையேனும், இல்லையேல் ஒன்றையேனுங் கற்றல் வேண்டும்; ஒவ்வொரு வேதத்தையுங் கற்கப் பன்னிரண்டு ஆண்டே காலம்; எனத் தர்மசாஸ்திரங்கள் கூறுகின்றன.

(*Cf.* கௌதமதர்மஸூத்திரம் 1, 1, 6; 1, 1, 9; 1, 3, 51; 1, 3, 52)

மூலங்கிழார் புறநானூற்று 166 ஆவது செய்யுளில் வேதங்கள் நான்கு, அங்கங்கள் ஆறு, அவை சிவபிரானிடமிருந்து தோன்றின என்பதை,

நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய்போகாது
ஒன்றுபுரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுதுநூல். (1—4)

என்ற அடிகளிற் கூறுகின்றனர். உலகில் உள்ளனவெல்லாம் கடவுளிடமிருந்தே தோன்றின என்பது 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்ற உபநிஷத்து வாக்கியத்திலும், வேதங்களும் அவரிடமிருந்தே தோன்றின என்பது 'சாஸ்த்ரயோநித்வாத்' என்ற வ்யாஸஸூத்திரத்திலும் கூறப்பட்டன.

கடுவனிளவெயினனார் பரிபாடல் மூன்றாம் பாடலின்கண் இருபத்தோருலகமும், ஆங்குள்ள உயிர்களும் திருமாலிடமிருந்தே தோன்றின என மாயாவாய்மொழியாகிய வேதங் கூறும் என்பதை,

மூவே ழுலகமு முலகினுண் மன்பது
மாயோய் நின்றவயிற் பரந்தவை யுரைத்தே
மாயா வாய்மொழி. (9—11)

என்ற அடிகளிற் கூறினர். மாயாவாய்மொழி என்றவிடத்து மாயா என்ற அடைமொழி வேதம் நித்தியம் என்பதை அறிவித்தலுங் காண்க. அவரே அப்பாடலிற் கடவுளை 'வேதத்து மறைநீ' (66) என்பதும், பகவத்கீதையில் 'ப்ரணவ: ஸர்வவேதேஷு' எனக் கண்ணபிரான் ஏழாவது அத்தியாயத்திற் கூறுவதும் ஒத்திருக்கின்றன. மறை என்பதற்கு உரைகாரர் உபநிடதம் எனப் பொருள் கூறியிருப்பனும், அதற்குப் பிரணவம் என்ற பொருளுங் கொள்ளலாம் என்பதைப் பகவத்கீதை அறிவிக்கின்றது.

வேதங்களாற் கடவுள் அறியப்படுகிறார் என்பதைக் கீரந்தையார் பரிபாடலில்,

நாவ லந்தண ரருமறைப் பொருளே. (2, 57)

என்றவிடத்து அருமறைப்பொருள் என்பதால் அறிவிக்கின்றனர்

இதனை, பகவத்கீதையில்

வேதைச்ச ஸர்வைரஹமேவ வேத்ய: (15, 15)

என்றதனாற் கண்ணபிரானும், சாஸ்த்ரயோநித்வாத் என்ற வேதாந்தஸூத்திரத்தால் வியாஸரும் கூறுகின்றனர்.

வேதங்கள் எழுதப்படாமல் குருமுகமாகவே கற்பிக்கப் பட்டு வந்தன என்பதைக் குறுந்தொகையில் பாண்டியன் எழுதி நெடுங்கண்ணனார்,

பார்ப்பன மகனே பார்ப்பன மகனே
எழுதாக் கற்பி னின்சொ லுள்ளும்
பிரிந்தோர் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ. (156)

என்றவிடத்து எழுதாக்கற்பு என்ற சொல்லாற் குறித்தனர்.

இக்கருத்தினையே பதிற்றுப்பத்திலும் புறநானூறு முதலிய வற்றிலும் வழங்கப்படும் கேள்வி என்ற சொல்லும் அறி விக்கும் :

உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தண ரருங்கல மேற்ப. (பதிற். 64, 4-5)

வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை.
(பதிற். 70, 18—9)

கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப
(பதிற். 74, 1—2)

கேள்வி முற்றிய வேள்வி யந்தணர்க்கு.
(புறநா. 361, 3—4)

அந்தணரே வேதங்களைச் சிறப்பாகக் கற்றுப் பாடினர் என மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியிற் கூறினர் :—

சிறந்த வேதம் விளங்கப் பாடி
. . . . . . அந்தணர் பள்ளியும் (468—476)

அந்தணர் வேதம் பாட (656)

அவற்றின் கருத்தை விரித்து விளக்கியோரை வாய்மொழிப் புலவர் எனக் குன்றம்பூதனார் பரிபாடல் ஒன்பதாம் பாட்டிற் கூறினர் :—

நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர் கேண்மின் (12—13)

வேதங்கள் தர்மத்தைப்பற்றிக் கூறுகின்றன என ஓதலாந்தை யார் ஐங்குறுநூற்றில் உணர்த்தினர். அறம்புரியருமறை (387)

அந்தணரே வேதத்தைக் கற்பித்த காரணம்பற்றி வேதத்தை அந்தணர் மறை (தொல். எழுத் 102) எனத் தொல்காப்பியனாரும், அந்தணரருமறை (பரிபா. 2, 57 ; 3, 14) எனக் கீரந்தையாரும் கடுவனிளவெயினனாரும், அந்தணர் முதுமொழி (கலித். 126, 4) என நல்லந்துவனாரும், அந்தணர் நூல் (திருக். 543) எனத் திரு வள்ளுவனாரும் கூறினர்.

வேதங்களைக் காக்கும் பிராம்மணர் வசிக்கும் இடத்திற் கிளிகளும் வேதவாக்கியங்களைக் கூறின என உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையிற் கூறினர் :—

வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
மறைகாப் பாள ருறைபதி (300—1)

வேதத்தில் உணர்த்தப்பட்ட வேள்விகளைப் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியும் சோழன் கரிகாற்பெருவளத்தானும் செய்ததாகப் புறநானூற்றுச் செய்யுட்கள் கூறும் :—

நற்பனுவ னல்வேதத்து
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை
நெய்ம்மலி யாவுதி பொங்கப் பன்மாண்
வீயாச் சிறப்பின் வேள்வி முற்றி (15, 17—20)

எருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம் (224, 8–4)

பாலினது இயற்கைக் குணமாகிய இனிப்பு எவ்வாறு மாறாதோ அவ்வாறே வேதநெறி மாறாது என்பதை முரஞ்சியூர் முடிநாகராயர்,

பாஅல் புளிப்பினும் பகலிருளினும்
நாஅல் வேத நெறிதிரியினும்
திரியாச் சுற்றமொடு முழுதுசேண் விளங்கி
நடுக்கின்றி நிலியரோ (புறநா. 2, 18—21)

என்ற அடிகளிற் குறிப்பாய் உணர்த்துகின்றனர்.

பசுவின்கண் பால் குறைந்தால் உலகிற்கு எவ்வளவு கேடு உண்டாகுமோ, அவ்வளவு கேடு பிராம்மணன் வேதத்தை மறந்தால் உண்டாகும் எனக் குறிப்பாற் கூறி, அதற்குக் காரணம் அரசன் முறைப்படிப் பாதுகாவாமையே எனத் திருவள்ளுவனார்

ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின் (560)

என்ற குறளிற் கூறினர்.

வேதத்தின் கரைகண்ட பார்ப்பனரைச் செல்வர் எனத் திரிகடுகம் 70-ஆவது செய்யுளில் நல்லாதனாரும், வேதங்களை அந்தணர் ஆராய்வார் என நான்மணிக்கடிகை 89-ஆஞ் செய்யுளில் விளம்பிநாகனாரும், அந்தணர் வேதத்தை அத்தியயனஞ்

செய்தல் இன்பத்தைத் தரும் என இனியவை நாற்பது 8-ஆஞ் செய்யுளில் பூதன் சேந்தனாரும் உரைத்தனர்.

(2) வர்ணங்களும் ஆச்ரமங்களும்

தமிழ்நாட்டு மக்கள் நால்வகைப்பட்டனர் எனவும், அவர் பார்ப்பனர், அரசர், வணிகர், வேளாளர் எனவும், அவருள் பார்ப்பனர்க்கு அறுதொழில்களும், அரசர்க்கு ஐந்து தொழில் களும், ஏனையோர்க்கு அறுதொழில்களும் உள்ளன எனவுந் தொல்காப்பியனார் பொருளதிகாரத்திற் கூறினர்.

நூலே ... அந்தணர்க் குரிய (மர. 71)
படையும் ... அரசர்க் குரிய (மர. 72)
வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை (மர. 78)
வேளாண் மாந்தர்க் குழுதூ ணல்லது
இல்லென மொழிப் பிறவகை நிகழ்ச்சி (மர. 81)

அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபி னரசர் பக்கமும்
இருமூன் று மரபி னேனோர் பக்கமும் (புறத். 16)

பார்ப்பனர்க்குரிய அறுதொழில்கள் ஓதல் வேட்டல் அவற் றைப் பிறர்க்குச் செய்தல் ஈதல் ஏற்றல் என்பன எனப் பாலைக் கௌதமனார் பதிற்றுப்பத்து 24-ஆவது செய்யுள் 6—8 அடி களில் உணர்த்தினர். இவ்வர்ணப்பிரிவுகளையும் அவரவர்க்குரிய தொழில்களையும் கௌதமதர்மஸூத்திரம் முதலான தர்ம சாஸ்திர நூல்கள் கூறுகின்றன. ஆங்குப் பிராம்மணர்க்கு அறு தொழில்கள் கூறப்பட்டிருப்பினும், ஏற்றலைத் தவிர்த்து ஏனைய வற்றை எல்லை கடந்து அவர் செய்யலாம் எனவும், ஏற்றலை எவ்வளவு குறுக்கலாமோ அவ்வளவு குறுக்கவேண்டும் எனவும் வால்மீகிராமாயணமும் வ்யாஸமஹாபாரதமுங் கூறும்:

ஸ்வகர்மநிரதா: .... ஸம்யதா:ச ப்ரதிக்ரஹே (பா. 6, 13)

ப்ரதிக்ரஹே ஸங்குசிதா க்ருஹஸ்தா: (அச்வ. 102, 81)

ஓதல் ஓதுவித்தல் இவற்றின் சிறப்பு நோக்கிப் பிராம்மண ரைக் கவிஞர் தத்தம் நூல்களிற் பல்வகைச் சொற்களாற் குறித் தனர் :— நான்மறைமுனிவர் (புறநா. 6), நான்மறை முதல்வர் (புறநா. 26; 93), நான்மறையாளர் (ஆசாரக். 53), கேள்வி யுயர்ந்தோர் (புறநா. 221) அருமறையந்தணர் (சிறுபாண். 204),

நான்மறையோர் (பட்டினப். 202). அவற்றுடன் வேட்டல் வேட்டுவித்தல் இவற்றின் சிறப்பு நோக்கி கேள்வி முற்றிய வேள்வியந்தணர் (புறநா. 361), வேள்வி முடித்த கேள்வி யந்தணர் (பதிற் 64) என்ற சொற்களாற் குறித்தனர். உண்மையைக் கூறுக (ஸத்யம் வத) என்ற மறைவிதி பிராம்மணர்க்கு நியமவிதியாதல்பற்றி மாங்குடி மருதனுர் மதுரைக்காஞ்சியில் அவரைப் பொய்யறியா நன்மாந்தர் என்கின்றனர். அவர் தர்மச்செயலிலே ஈடுபடுதல்பற்றி, பதிற்றுப்பத்தில் அறம்புரி யந்தணர் (24) எனக் கூறப்படுகின்றூர். அவர்க்குள்ள அறு தொழில்களை நோக்கி அவரை அறுதொழிலோர் என்கின்றனர் திருவள்ளுவனுர். ஆசறுகாட்சியவர் எனக் குறிஞ்சிப்பாட்டில் 17-ஆம் அடியில் அவர் கூறப்படுகின்றனர். அந்தணராய்ப் பிறத்தலே சிறந்தது என நான்மணிக்கடிகை 33-ஆம் செய்யுளில் விளம்பி நாகனுர் கூறினர்.

தோல்வேலை செய்பவன் இழிபிறப்பாளன் இழிசினன் எனப் புறநானூற்றில் 170, 82, 287 செய்யுட்களிற் கூறப்பட்டான். துடியன் பாணன் பறையன் கடம்பன் இந்நால் வரும் அந்நூலில் 335-ஆம் செய்யுளிற் குறிக்கப்பட்டனர்.

ஒவ்வொரு வர்ணத்தாரும் தத்தமக்குரிய நிலையிலிருந்து தவறின் அவர் இழிந்தாராகக் கருதப்பட்டு அவரவர்க்குள்ள உரிமையைப் பெறவில்லை என்பதை

அன்ன ராயினு மிழிந்தோர்க் கில்லை (மரபு. 85)

என்ற சூத்திரத்தில் தொல்காப்பியனுர் உணர்த்துகின்றூர்.

ஆச்ரமங்கள் அல்லது நிலைகள் நான்கு வகைப்படும்; அவை பிரும்மசாரிநிலை, கிருஹஸ்தநிலை, வானப்பிரஸ்தநிலை, ஸந்நியாஸிநிலை ஆகும்.

பிராம்மணப்பிரும்மசாரி குடுமி வைத்திருந்தான் எனக் கபிலர் ஐங்குறுநூற்றில்

நம்மூர்ப்
பார்ப்பனக் குறுமகப் போலத் தாமும்
குடுமித் தலைய (202)

என்றவிடத்துக் கூறியுள்ளார். அவன் ஒன்பது நூலால் ஆக்கிய மூன்று வடங்கொண்ட பூணூலை அணிந்து நாற்பத்தெட்டு ஆண்டு

வேதாத்தியயநஞ் செய்தான் என நக்கீரனார் திருமுருகாற்றுப் படையில்

அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பிய வறனவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து
இருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல
ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ (179 & 184)

என்றவிடத்து உணர்த்தினர். அவன் புரசதண்டத்தையும் தாழ்ந்த கமண்டலத்தையும், விரதவுணவையுங் கொண்டனன் எனக் குறுந்தொகையுள் ஏனாதி நெடுங்கண்ணனார்

செம்பூ முருக்கி னன்னார் களைந்து
தண்டொடு பிடித்த தாழ்கமண் டலத்துப்
படிவ வுண்டிப் பார்ப்பன மகனே (156)

என்றவிடத்து விளம்பினர்.

பிரும்மசாரி வேதங் கற்றவுடன் கிருஹஸ்தாச்ரமத்தை அடைய விவாஹஞ் செய்துகொள்கிறான். அவ்விவாஹம் எட்டு வகைப்படும் எனவும், அவை பிராம்மம், பிராஜாபத்யம், ஆர்ஷம், தைவம், காந்தர்வம், ஆஸுரம், ராக்ஷஸம், பைசாசம் எனவும் கௌதமதர்மஸூத்ரம் (1, 4, 4—11) முதலிய நூல்கள் கூறும். அவற்றுள் முன்னர் நான்கும் பெருந்திணைப்பாற்பட்டன; காந்தர்வம் களவினை ஒத்தது; ஆஸுரம், ராக்ஷஸம், பைசாசம் இம் மூன்றுங் கைக்கிளைப்பாற்பட்டன; எனத் தொல்காப்பியனார் களவியல் 15, 1, 14 சூத்திரங்களிற் கூறினர். விவாஹத்தில் மனைவியுடன் கணவன் அக்னியை வலம் வருதலை கலித்தொகையுள் மருதனிளநாகனார்,

காதல்கொள் வதுவைநாட் கலிங்கத்து ளொடுங்கிய
மாதர்கொண் மானோக்கின் மடந்தைதன் றுணையாக
ஓதுடை யந்தண னெரிவலஞ் செய்வான்போல். (69)

என்றவிடத்துக் கூறினர்.

ஒருவரை ஒருவர் ஏழடி பின்சென்றால் அவர் அவர்க்கு நண்பர் ஆவர் என்பதைப் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார்,

காலி னேழடிப் பின்சென்று. (166)

என்றவிடத்துக் குறித்தனர். இதே கருத்தினை வேதவ்யாஸரும் மஹாபாரதம் வனபர்வத்தில்,

ஸதாம் ஸாப்தபசம் மித்ரம் ஆஹுர: ஸந்த: குலோசிதா:
என்றனர். (261, 37)

விவாஹத்தில் குழந்தைகளைப் பெற்ற சுமங்கலிகள் மணமகளை ஆசீர்வதித்தலை அகநானூற்றில் நல்லாவூர்கிழார்,

புதல்வர் பயந்த திதலையவ் வயிற்று
வாலிழை மகளிர் நால்வர் கூடிக்
கற்பினின் வழாஅ நற்பல வுதவிப்
பெற்றோர் பெட்கும் பிணையை யாகுக. (86)

என்றவிடத்து உணர்த்தினர். இக்கருத்தினையே,

ஸுமங்கலீ: இயம் வதூ: இமாம் ஸமேத பச்யத ।
ஸௌஹாக்யம் அஸ்யை தத்வா யாதாஸ்தம் விபரேதந ॥

என்று வைதிகமந்திரங் கொண்டது.

பெண்ணைத் தானஞ்செய்ய ஒருவரும் இல்லையேல் அவள் தானே தன்னைக் கணவற்குத் தானஞ் செய்து கொள்ளலாம் என்பதைத் தொல்காப்பியனார்,

கொடுப்போ ரின்றியுங் கரண முண்டே. (கற்பு. 2)

என்ற சூத்திரத்திற் கூறினர். அக்கருத்தையே மஹாபாரதம் ஆதிபர்வத்தில் வ்யாஸர்,

ஆத்மனோ பந்து: ஆத்மைவ கதிராத்மைவ சாத்மன: ।
ஆத்மனைவாத்மனோ தானம் கர்த்துமர்ஹஸி தர்மத: ॥ (94,13)

என்றவிடத்துக் கூறுகின்றனர்.

மூவர்க்குரிய அக்னிஸாக்ஷிகமான கன்யகாதானம் வேளாளராலும் பின்னர்க் கொள்ளப்பட்டதெனத் தொல்காப்பியனார்

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க் காகிய காலமு முண்டே (கற்பு. 3)

என்ற சூத்திரத்திற் குறித்தனர்.

ருதுகாலத்திற் கணவன் மனைவியிடமிருந்து பிரிதல் தகாது என்பதைத் தொல்காப்பியனார்

பூப்பின் புறப்பா டீரா றுநாளும்
நீத்தகன் றுரையா ரென்மனார் புலவர் (கற்பு. 46)

என்றவிடத்துக் கூறினர். இவ்வாறே திரிகடுகம் 17-ஆம் செய்யுளுங் கூறும்.

இக்கருத்தினையே கௌதமர் தனது தர்மஸூத்ரத்தில் ஊதௌ உபேயாத் (1—5—1) என்ற சூத்திரத்திற் கூறினர். அதனையே மனுதர்மசாஸ்திரமும்

> ஊது: ஸ்வாபாவிக: ஸ்த்ரீணாம் ராத்ரய:
> ஷோடச ஸ்ம்ருதா:
> சதுர்பிரிதரை: ஸார்தம் அஹோபி:
> ஸத்விகர்ஹிதை: ‖ (113, 46)

என்றவிடத்துக் கூறும்.

கல்வியைக் குறித்து கணவன் மனைவியை விட்டுப் பிரிய நேரிடின், அப்பிரிவு மூன்று ஆண்டுகட்கு மேற்படக்கூடாது எனத் தொல்காப்பியனார் கற்பியல் 47-ஆம் சூத்திரத்தில் உணர்த்தியுள்ளார். தேவதைகள் குறித்தும், போர்குறித்தும், கணவன் பிரிதலும் உண்டு என்பதை அகத்திணையியலிற் கூறினர்.

கிருஹஸ்தர்க்கு மூன்று கடன்கள் உள என்பதை நல்லாதனார் திரிகடுகம் 34-ஆஞ் செய்யுளிற் குறித்தனர். அவை ருஷிகடனும், தேவகடனும், பிதிர்கடனும் ஆகும். ருஷிகடன் வேதாத்தியயநத்தாலும், தேவகடன் தேவர்களைக் குறித்து ஹோமஞ்செய்தலாலும், பிதிர்கடன் ஆண்மகவைப் பெறுதலாலும் நீங்கும் என யஜுர்வேதத்துள்ள தைத்திரீயஸம்ஹிதை

> ஜாயமாநோ வை ப்ராம்ஹணோ த்ரிபி: ருணவா
> ஜாயதே, ப்ரம்ஹசர்யேண ருஷிப்ய:, யஜ்ஞேந
> தேவேப்ய:, ப்ரஜயா பித்ருப்ய: (6, 3, 10)

என்ற தொடர்கள் கூறுகின்றன.

தேவகடன் புறநானூற்று இரண்டாஞ் செய்யுளில்

> அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்

என்றவிடத்தும், நெய்தற்கலியில்

> அந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
> செந்தீச் செவ்வழ லொடங்க (2)

என்றவிடத்தும், பெரும்பாணாற்றுப்படையில்

> கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
> வேள்வித் தூணத் தசைஇ (315—6)

என்றவிடத்துங் குறிக்கப்பட்டது.

பிதிர்கடன் புறநானூற்று ஒன்பதாஞ் செய்யுளில்

தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்

என்றவிடத்துக் குறிக்கப்பட்டது. பிதிரர் தென்புறத்தில் வாழ்கின்றனர் என்பதைத் தைத்திரீயஸம்ஹிதை

உக்ஷிணா பிதர: (4, 1, 1)

என்றவிடத்துக் கூறுகின்றது.

உக்ஷிணஸ்யாம் திசி சுஹே ஸர்வே பித்ருகணா: ஸ்யிதா:
(அநு. 238, 44)

என மஹாபாரதமுங் கூறும்.

வானப்பிரஸ்தர் நீண்ட சடையோடு உடலசையாது குன்றுகளில் தவஞ் செய்தனர் என நற்றிணையிற் சல்லியங்குமரனார்

நீடிய சடையோ டாடா மேனிக்
குன்றுறை தவசியர் (141)

என்ற அடிகளிற் கூறினர்.

அவர் சடைவளர்த்தனர் என்பதை 280-ஆம் குறளில் நீட்டலும் என்ற சொல்லாற் குறித்து, அருளுடைமை புலான் மறுத்தல் முதலிய குணங்களோடு வாய்ந்திருந்தனர் என்பதைக் கூறினர் திருவள்ளுவனார்.

ஸந்நியாஸத்தைத் தொல்காப்பியனார்
அருளொடு புணர்ந்த வகற்சி யானும் (புறத். 17)

என்றவிடத்துக் குறிக்கின்றனர். ஸந்நியாஸிகள் காஷாயவஸ்திரத்தையும் முக்கோலையுங் கொண்டனர் என முல்லைப்பாட்டில் நப்பூதனார்

கற்றோய்த் துடுத்த படிவப் பார்ப்பான்
முக்கோ லசைநிலை கடுப்ப (37—8)

என்றவிடத்துக் கூறினர்.

ஸந்நியாஸிகளை இல்வாழ்வான் போற்றவேண்டும் எனத் திருக்குறள்

இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றி னின்ற துணை (திருக். 41)

என்றவிடத்தும், மஹாபாரதம்

ஏவம் கார்ஹஸ்த்யம் ஆச்ரித்ய வர்த்தந்தே
இதராச்ரமா: (சாந். 269, 6)

என்றவிடத்துங் கூறும்.

எந்நிலையிலிருப்பவனும் ஜீவன்முக்தியை அடையலாம். அதனைத் தொல்காப்பியனார்,

காம நீத்த பாலி னானும் (புறத். 17)

என்ற அடியிலும், திருவள்ளுவனார்,

ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும் (370)

என்ற குறளிலும், முடத்தாமக்கண்ணியார்,

தவஞ்செய் மாக்க டம்முடம் பிடாஅது
அதன்பய மெய்திய வளவை (91, 2)

என்ற பொருநராற்றுப்படையடிகளிலும், மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியில்,

சிறந்த வேதம் விளங்கப் பாடி
விழுச் சீரெய்திய வொழுக்கமொடு புணர்ந்து
நிலமமர் வையத் தொருதா மாகி
உயர்நிலை யுலக மிவணின் றெய்தும்
அறநெறி பிழையா வன்புடை நெஞ்சின்
பெரியோர் மேஎ யினிதி னுறையும்
குன்றுகுயின் றன்ன வந்தணர் பள்ளியும் (463–474)

என்றவிடத்தும் கூறியுள்ளனர்.

அக்கருத்தினையே கடோபநிஷத்,

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே காமா யேஸ்ய
ஹ்ருதி ச்ரிதா: ।
அத மர்த்யோ அம்ருதோ பவத்யத்ர ப்ரஹ்ம
ஸமச்நுதே ॥ (6, 14)

என்றவிடத்தும்,

ப்ருஹதாரண்யகோபநிஷத்
யோ அகாம: .... ப்ரஹ்மைவ ஸந் ப்ரஹ்மாப்
நோதி (4, 46)

என்றவிடத்தும், மஹாபாரதம்

யோ ந காமயதே கிஞ்சிந்ந கிஞ்சிதவமந்யதே ।
இஹ லோகஸ்ய ஏவைஷ ப்ரஹ்மபூயாய கல்பதே ॥
(அச்வமே. 47, 8)

என்றவிடத்துங் கூறும்.

(3) அக்னிஹோத்ரமும் யாகங்களும்

அந்தணர் காலே மாலே ஆகிய ஸந்திகளில் கார்ஹபத்யம் ஆஹவநீயம் தக்ஷிணாக்னி என்ற முத்தீக்களில் தேவர்களைத் தீர்க்க அக்னிஹோத்ரஞ் செய்தனர் என்பது புறநானூறு, பட்டினப்பாலை, கலித்தொகை, குறிஞ்சிப்பாட்டு முதலிய நூல்களிற் கூறப்பட்டது.

அந்தி யந்தண ரருங்கட னிறுக்கும்
முத்தீ விளக்கிற் றுஞ்சும்
பொற்கோட் டிமயமும் பொதியமும் போன்றே.
(புறநா. 2)

நின் னோடே
அழல்புறந் தரூஉ மந்தண ரதுவே. (புறநா. 122, 3)
அமரர்ப் பேணியு மாவுதி யருத்தியும்.
(புறநா. 99 ; பட்டினப். 200)

அந்தி யந்தண ரெதிர்கொள வயர்ந்து
செந்தீச் செவ்வழ லுருடங்க. (கலித். 119)
அந்தி யந்தண ரயர. (குறிஞ்சிப். 225)

வேள்விகளால் தேவர்களும் கடவுள் முதலியோரும் இன்புறுத்தப்பட்டனர் எனப் பல்லிடங்களிற் பதிற்றுப்பத்து கூறும் :

வேள்வியிற் கடவு ளருத்தினை கேள்வி
உயர்நிலை யுலகத் தையரின் புறுத்தினை. (70)
கேள்வி கேட்டுப் படிவ மொடியாது
வேள்வி வேட்டனை யுயர்ந்தோ ருவப்ப. (74)
உருகெழு மரபிற் கடவுட் பேணியர்
கொண்ட தீயின் சுடரெழு தோறும்
விரும்புமெய் பரந்த பெரும்பெய ராவுதி. (21)

அந்தணர் மந்திரவிதிப்படி அவற்றைச் செய்தனர் எனத் திருமுருகாற்றுப்படை, கலித்தொகை, சிறுபஞ்சமூலம் இவை கூறும் :

ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே. (திருமு. 94—6)
கேள்வி யந்தணர் கடவும்
வேள்வி யாவியின். (கலித். 36)
வேட்பவன் பார்ப்பான். (சிறுபஞ்.)

வேள்விகளில் தூணங்கள் இருந்தன என்பதும், அவை முற்றிலும் கயிறுபோல் திரித்த துணிகளால் மூடப்பட்டன என்பதும் பெரும்பாணாற்றுப்படை, அகநானூறு இவை கூறும் :

கேள்வி யந்தண ரருங்கட னிறுத்த
வேள்வித் தூணத் தசைஇ. (பெரும். 315—6)
வேள்விக்
கயிறரை யாத்த காண்டகு வனப்பின்
அருங்கடி நெடுந்தூண் போல. (அகநா. 220)

வேள்வித்தூணில் துணி கயிறுபோல் திரிக்கப்பட்டு முழுதும் கட்டப்பட்டிருப்பினும், உத்காதாவின் இடுப்பு அத் தூணைத் தொடுவதற்காக ஆங்குச் சிறிது அது நீக்கப்பட்டிருத்தல் நோக்கத்தக்கது. தூணைத் தொட்டுக்கொண்டு உத்காதா ஸாம கானம் செய்யவேண்டும் என்பது சுருதிவாக்யமாகையாலும், முற்றிலும் துணி சுற்றப்படவேண்டும் என்பது ஸ்மிருதிவாக்கிய மாகையாலும், முற்றிலும் துணி சுற்றப்படவேண்டும் என நியதி இல்லை என்பது பிற்காலத்தாரது கொள்கை. இதனைப் பூர்வமீமாம்ஸையில் ஸ்மிருத்யதிகரணத்திற் காணலாம்.

ஆமை வேள்விக்குண்டத்தின் கீழே குழியில் வைக்கப்படுகின்றதை அகநானூற்று 361-ஆம் செய்யுளிற் கூறினர் எயினந்தை மகனார் இளங்கீரனார் :

பெரியோ ரார
அழலெழு தித்திய மடுத்த யாமை.
(தித்தியம்=வேள்விக்குண்டம்)

சயனத்தில் ஆமையை வேள்விக்குண்டத்தின்கீழ் வைத்தலை
யஜ்ஜீவந்தங் கூர்மம் உபதயாதி (5, 2, 45)

என்னுமிடத்து தைத்திரீயஸம்ஹிதை கூறும்.

வேள்வித்தீயை மின்னலிற்கு உவமானமாகக் கார்நாற்பதிற் கூறினர் மதுரைக்கண்ணங்கூத்தனார்.

பொச்சாப் பிலாத புகழ்வேள்வித் தீபோல
எச்சாரு மின்னு மழை. (7)

சோழநாட்டிற் பூஞ்சாற்றூரில் இருந்த பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயனைப்பற்றி ஆவூர் மூலங்கிழாரும், பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியைப்பற்றி நெட்டிமையாரும், சோழவரசர்களுள் கரிகாற்பெருவளத்தானைப் பற்றிக் கருங்குழலாதனாரும், இராஜசூயம் வேட்ட பெருநற் கிள்ளியைப்பற்றி ஔவையாரும், நலங்கிள்ளியைப்பற்றிக் கோவூர்கிழாரும், சேரன் செல்வக்கடுங்கோ வாழியாதனைப் பற்றிக் கபிலரும், அவரவர் இயற்றிய வேள்விகளைப்பற்றிச் சிறப்பித்துக் கூறியிருத்தல் கவனித்தற்கு உரியது.

கௌணியன்: சிவபிரானிடம் தோன்றித் தருமத்தை அறிவித்ததும் நான்கு பகுதியையும் ஆறு அங்கங்களையும் உடையதும் ஆன வேதத்தைக் கற்று, அவைதிகசமயங்களைக் கண்டித்து, ஏழு பாகயஞ்ஞங்களையும் ஏழு ஹவிர்யஞ்ஞங்களையும் ஏழு ஸோமஸம்ஸ்தையையும் குறைவின்றிச் செய்து விளங்கிய குலத்திற் கௌணியன் பிறந்தனன். தானும் மனமொத்த மனைவியுடன் வேள்விகளில் நீர் நாணுமாறு நெய்யை வழங்கி, எண்ணிக்கையற்ற வேள்விகளைச் செய்து விருந்தினரை உபசரித்தான். இச்செய்தி புறநானூற்றில் 166-ஆவது செய்யுளில் உள்ளது. பாகயஞ்ஞங்கள், ஹவிர்யஞ்ஞங்கள், ஸோமஸம்ஸ்தைகள் இவற்றைப்பற்றி விரிவாய், கௌதமதர்மஸூத்ரம் முதலிய நூல்கள் கூறும்.

முதுகுடுமிப்பெருவழுதி: நாலு வேதங்களிலும் தர்மசாஸ்திரங்களிலும் கூறியவாறுச் சிறப்பாக அவிப்பொருள்களைச் சேகரித்து, அவற்றை மிகுந்த நெய்யுடன் கலந்து தேவதைகட்கு அளிக்குமாறு பல வேள்விகளை முதுகுடுமிப்பெருவழுதி இயற்றினன். தனது புகழைப் பரப்பிப் பல்லிடங்களில் வெற்றித்தூண்களை நாட்டினன். இச்செய்தி புறநானூற்றில் 15-ஆம் செய்யுளிற் கூறப்பட்டது. ஆங்கு வேள்விகளை முடித்தபின்னர் யூபம் நட்டான் எனக் கூறப்பட்டிருத்தலான், யூபம் என்பது வெற்றித் தூணைக் குறிக்குமேயன்றி வேள்வித்தூணைக் குறிக்காது. அச்சொல்லை அப்பொருளில் காளிதாஸன் ரகுவம்சத்தில் ஆறுப் ஸர்க்கத்தில் கார்த்தவீரியார்ஜுனனைப்பற்றி வர்ணிக்குமிடத்து,

அஷ்டாதசத்வீபநிகாதயூப:

என்ற தொடரில் வழங்கியுள்ளார்.

மாங்குடி மருதனார் மதுரைக்காஞ்சியிற் கூறும்

பல்சாலை முதுகுடுமியின்
நல்வேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர்
புணர்கூட் டுண்ட புகழ்சால் சிறப்பின் (759—863)

என்ற அடிகளை நோக்கின் பெருவழுதி வேள்வியனைத்தையும் நிஷ்காமமாகச் செய்து ஆத்மோபதேசம் பெறுவதற்கு இன்றியமையாததான சித்தசுத்தியைப் பெற்றான் எனக் கூறின் மிகையாகாது. அவர் இறுதியிற் பிறப்பிறப்பின்றி சேவடியை அடைகின்றனர் என்பதைப் பகவத்கீதை,

கர்மஜம் புத்தியுக்தா ஹி ஃபலம் த்யக்த்வா மநீஷிண: ।
ஜந்மபந்தவிநிர்முக்தா: பதம் கச்சந்த்யநாமயம் ॥ (2, 51)

என்றவிடத்துக் கூறும்.

கரிகாற்பெருவளத்தான்: தர்மத்தை ஐயமற உணர்ந்த அந்தணரைக்கொண்ட ஸபையில் வேள்விமுறைகளை நன்கு அறிந்த ருத்விக்குக்கள் செய்யவேண்டியவற்றை நன்கு செய்துகாட்ட, கற்புடைமனைவியருடன் வேள்விச்சாலையில் இருந்து கருடசயனம் செய்து புகழைப் பெற்றான் பெருவளத்தான். இச்செய்தி புறநானூற்றில் 224-ஆம் செய்யுளில் உள்ளது.

பெருநற்கிள்ளி இராஜஸூயயாகம் செய்தான் என்பதும், **நலங்கிள்ளி** பல வேள்விகளைச் செய்தான் என்பதும் புறநானூற்றில் 367, 400-ஆம் செய்யுட்களிலிருந்து அறியப்படுகின்றன.

செல்வக்கடுங்கோவாழியாதன்: வேதங்களை நன்கு கற்ற அந்தணர்களைக்கொண்டு வேள்வியில் கடவுளையும் தேவர்களையும் இன்புறச்செய்து, அந்தணர்கட்கு ஏராளமாய் அருங்கலங்களை இவ்வரசன் வழங்கினன் எனப் பதிற்றுப்பத்து 64, 70 செய்யுட்கள் கூறும்.

பாண்டியர்கள் பாண்டவவமிசத்தினர் எனக் கருதப்பட்டனர். ஆகலினன்றோ அவர் கவுரியர், பஞ்சவர் என்ற சொற்களால் அகநானூறு புறநானூறு முதலிய நூல்களிற் குறிக்கப்படுகின்றனர்.

தவிரா ஈகைக் கவுரியர் மருக (புறநா. 3)
வென்வேற் கவுரியர் தொன்முது கோடி (அகநா. 70)

தெனுஅது
வெல்போர்க் கவுரியர் நன்னாட் டுள்ளதை (அகநா. 342)
செருமாண் பஞ்சவ ரேறே (புறநா. 58)

கவுரியர் என்பது கௌரவ்ய: என்பதன் தற்பவம். அச் சொற்குக் குருவமிசத்திற் பிறந்தவர் என்பது பொருள். அக் காரணம்பற்றி அச்சொல் துரியோதனன் முதலியோரைக்குறிக்க வழங்கப்பட்டதுபோல் தர்மபுத்திரர் முதலியோரையுங் குறிக்க வழங்கப்பட்டது. மஹாபாரதம் சல்யபர்வத்தில் தர்மபுத்திரன் குருபுங்கவன் எனவும் குரூணாம் வ்ருஷ**ஃ**: எனவுங் குறிக்கப் படுகின்றனன்.

தஸ்மிந் மஹேஷ்வாஸ**ய**ரே விசஸ்தே
ஸங்க்ராமமயயெ குருபுங்**ஃ**வேந । (16, 85)
ஜஹார மத்ர**ஃ**திபதிம் மஹாத்மா
முக்யம் ச லேஹே வ்ருஷ**ஃ**: குரூணாம் । (16, 11)

பஞ்சவர் என்பது பஞ்ச என்ற தற்சமத்திற்கு அர் விகுதி கூட்டி வந்தது. அப்பாண்டவர் ஐவர் எனவும் புறநானூற்று இரண்டாஞ் செய்யுளிற் கூறப்படுகின்றனர்.

சோழர் சிபியின் வமிசத்தினர் எனப் புறநானூற்று 39, 43-ஆம் செய்யுட்கள் கூறும்.

புறவி னல்லல் சொல்லிய கறையடி
யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்
கோனிறை துலாஅம் புக்கோன் மருக. (39)
கொடுஞ் சிறைக்
கூருகிர்ப் பருந்தி னேறுகுறித் தொரீஇத்
தன்னகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி யஞ்சிச் சீரை புக்க
வரையா வீகை யுரவோன் மருக. (43)

இந்திரன் பருந்துவடிவமாகவும் அக்னி புறவடிவமாகவும் சிபியைச் சோதிக்க வந்தனர் எனவும், அவன் துலாக் கோலில் ஏறினன் எனவும் மகாபாரதம் வனபர்வம் 132, 133 அத்யாயங்கள் கூறும். இதனாற் பாண்டியரும், சோழரும் க்ஷத்திரியர்கள் என அறியக்கிடக்கின்றது. அதனாலேயே அவர் வேள்விகளில் ஈடுபட்டனர் எனக் கூறல் தகும்.

(4) இம்மையும் மறுமையும்

இவ்வுலகிலுள்ள பிராணிகள் எல்லாம் உயிரையும் உடலையுங் கொண்டன. உடலைச் சரீரம் என்பர். சரீரம் ஸ்தூல சரீரம் ஸூக்ஷ்மசரீரம் என இருவகைப்படும். உயிர் முக்தியை அடையும் வரை, அதற்கு ஒரே ஸூக்ஷ்மசரீரமே உண்டு. ஸ்தூல சரீரமோ, உயிர் இருக்கும் உலகத்திற்குத் தக்கவாறு மாறுபடும். ஆகலின் இவ்வுலகில் இருக்கும் எல்லாப்பிராணிகளின் உயிரும் ஒருகாலத்தில் ஸ்தூலசரீரத்தை விட்டு நீங்க நேரிடும். ஆகலின் அவ்விரண்டற்கும் உள்ள ஸம்பந்தம் நிலைத்திராது. இக்கருத்தினை,

வீயாது
உடம்பொடு நின்ற வுயரு மில்லை. (புறநா. 363, 8)
நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
(பொருநர். 176; பெரும்பாண். 466)

முதலிய அடிகள் கூறும்.

ஒருகாலத்தில் உயிர் உடலைவிட்டு நீங்கும் என்பதை,

யாக்கை
இன்னுயிர் கழிவ தாயினும். (அகநா. 52, 13)

என்ற அடிகள் உணர்த்தும்.

உயிரை உடலைவிட்டு நீங்குமாறு செய்பவனைக் கூற்றம், கூற்று என்ற சொற்களாற் குறித்தனர்:

உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன. (மலைபடு. 209)
உயிருண்ணுங் கூற்றுப் போன்றன. (புறநா. 4)

அவன் கடுஞ்சினத்தன் என்றும், பக்ஷபாதமில்லாதவன் என்றும்,

கால னனைய கடுஞ்சின முன்ப. (பதிற். 39, 8)
திருந்துகோன் ஞமன். (பரிபா. 5, 61)

என்ற அடிகள் அறிவிக்கும்.

தீயாரைப் பாசத்தாற் கட்டி அவன் கொண்டுபோவான் எனவும், அவனுடைய ஆயுதம் கணிச்சி எனவும்

கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திற லொருவன்
பிணிக்குங் காலை யிரங்குவிர் மாதோ

நல்லது செய்த லாற்றீ ராயினும்
அல்லது செய்த லோம்புமின். (புறநா. 195)

என்ற 'அடிகள் விளக்குகின்றன.

உடலை விட்டு நீங்கிய உயிர் மறுமைக்குச் செல்ல ஆண் மகன் ஈமச்சடங்கில் பிண்டம் முதலியவற்றைக் கொடுக்க வேண்டும். ஆண்மகன் இல்லையேல் மனைவியே பிண்டம் அளிப்பாள் :

நின் வெய்யோன் பயந்த
புகழ்சால் புதல்வன் பிறந்தபின் வாவென. (புறநா. 222)
பிடியடி யன்ன சிறுவழி மெழுகித்
தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல். (புறநா. 234)
நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழ் பிண்டம். (புறநா. 246)

இக்கருத்தையே,

இச்சந்தி பிதர: புத்ராந் ஸ்வார்த்தஹேதோர்பரோத்கச ।
இஹ லோகாத் பரே லோகே தாரயிஷ்யந்தி யே ஹிதா: ॥
(த்ரோண, 174, 54)

என்றவிடத்து மஹாபாரதம் கூறும்.

ஒருவர் இம்மையிற் செய்த வினையின் பயனை மறுமையில் அனுபவிப்பர் என்பதை,

இம்மைச் செய்தது மறுமைக் காம். (புறநா. 134)
நல்லத னலனுந் தீயதன் றீமையும்
இல்லை யென்போர்க் கினனா கிலியர். (புறநா. 29)
தன்னொடு செல்வது வேண்டி னறஞ்செய்க.
(நான்மணி. 15)

என்ற அடிகள் கூறுகின்றன.

நல்வினைப்பயனை ஸ்வர்க்கத்தில் அவர் அனுபவிப்பர் என்பதை,

ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென் றுணீஇயர்
உயர்ந்தோ ருலகத்துப் பெயர்ந்தனன். (புறநா. 174)
அறம்பெரி தாற்றி யதன்பயன் கொண்மார்
சிறந்தோ ருலகம் படருநர் போல. (பரிபா. 19)

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. (திருக். 86)

என்ற அடிகள் உணர்த்தும்.

தீவினைப்பயனை நரகத்தில் அனுபவிப்பர் என்பது,

அருளு மன்பு நீக்கி நீங்கா
நிரயங் கொள்பவரொ டொன்றாது. (புறநா. 5)
பெண்கொலை புரிந்த நன்னன் போல
வரையா நிறையத்துச் செலீஇயரோ. (குறுந். 292)

என்றவிடத்து உணர்த்தப்பட்டது.

இந்திரியங்களை அடக்காமை நரகத்திற் செலுத்திவிடும் என,

அடங்காமை
ஆரிரு ளுய்த்து விடும். (திருக். 130)

என்னுமிடத்து திருவள்ளுவர் கூறினர்.

பயனைக் கருதாது ஒருவன் நல்வினைகளைச் செய்தல் சிறந்தது என்பதை

இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
அறவிலை வணிக னாயலன். (புறநா. 134)
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுந ருண்மை யானே. (புறநா. 182)
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாள. (அகநா. 54)
பிறர்க்கென வாழ்திநீ. (பதிற். 38)

என்ற அடிகள் குறிக்கின்றன. இக்கருத்தினையே

தேந த்யக்தேந பு⁴ஞ்ஜீதா²:

என ஈசாவாஸ்யோபநிஷத்தும்,

கர்மண்யே வாதி⁴காரஸ்தே மா ப²லேஷு கதா³சந
என பகவத்கீதையுங் கூறும். (2, 47)

கணவன் இறப்பின், மனைவி உடன்கட்டையேறுதலும் உண்டு என்பது,

பெண்டிரும்
பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்
மார்பகம் பொருந்தி யாங்கமைந் தனரே. (புறநா. 62)

எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே. (புறநா. 246)

என்ற அடிகளாற் குறிக்கப்பட்டது.

அவள் கைம்மைவிரதம் பூணுதலும் உண்டு என்பது,

தன்னமர் காதலி புன்மேல் வைத்த
இன்சிறு பிண்டம் யாங்குண் டனன்கொல்.
(புறநா. 234)

என்றவிடத்து உணர்த்தப்பட்டது.

போரில் இறந்த வீரர் ஸ்வர்க்கம் எய்தினர் என்பது

நீள்கழன் மறவர் செல்வழிச் செல்க. (புறநா. 93)

என்றவிடத்து குறிக்கப்பட்டது. இக்கருத்தினை,

ஹதோ வா ப்ராப்ஸ்யஸி ஸ்வர்கம். (2, 37)

என்ற பகவத்கீதையடி கூறும்.

ஸ்வர்க்கம் என்ற பொருளிற் பல சொற்கள் வழங்கப் பட்டுள்ளன :— தேவருலகம் (புறநா. 228), உயர்நிலையுலகம் (புறநா. 287 ; பதிற். 52, 54 ; மதுரைக். 197), மேலோ ருலகம் (புறநா. 229), நாகம் (புறநா. 367), வச்சிரத்தடக்கை நெடியோன்கோயில் (புறநா. 241), பெரும்பெயருலகம் (குறுந். 83), புத்தேளுடு (குறுந். 101 ; முதுமொழி. 71), துறக்கம் (அகநா. 143, 233), சிறந்தோருலகம் (பரிபா. 19), இமையோர்தேம் (தொல். பொருளியல் 52). இமையார் என்பது செய்யுளில் இமையோர் என மாற்றப்பட்டது எனக் கொள்ளல் தகும். ஸ்வர்க்கத்திற்குத் தலைவன் இந்திரன். அவன் புரந்தரன் (பரிபா. 5, 56), வேள்விமுதல்வன் (பரிபா. 5, 31), ஐயிரு நூற்றுமெய்ந்நயனத்தவன் (பரிபா. 9, 8 ; திருமுருகு. 155) முதலிய சொற்களாற் குறிக்கப்படுகின்றான். அவன் நூறு வேள்விகளைச் செய்தனன் என

நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து

என்ற திருமுருகாற்றுப்படையடிகள் கூறும்.

இவனது குற்றத்தால் அகலிகை கவுதமரது சாபத்தால் கல்லுரு ஆனாள் என்பதை,

இந்திரன் பூசை யிவளக லிகையிவன்
சென்ற கவுதமன் சினனுறக் கல்லுரு
வொன்றிய படியிது (பரிபா. 19, 50—52)

என்ற அடிகள் உணர்த்துகின்றன. அகலிகை கல்லுருவானுள் என வால்மீகிராமாயணத்திற் கூருவிடினும், காளிதாஸன் ரகுவம்சத்தில்

ஶௌதமவயூ: ஶிலாமயீ (11, 34)

என்றவிடத்துக் கூறியுள்ளார்.

அவன் தபஸ்விகளை அவமதித்தலாற் றுன்பம் எய்தினன் என்பது

ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி (திருக். 25)

என்ற குறளால் அறிவிக்கப்படுகின்றது. ஈண்டுக் குறிக்கப் பட்ட தபஸ்விகள் கௌதமர், அகஸ்தியர், ச்யவனர், ஸம்வர்த்தர் ஆவர் என்பது வால்மீகிராமாயணம் வ்யாஸமஹாபாரதம் இவ் விருநூல்களிலிருந்து அறியக்கிடக்கின்றது.

ஸ்வர்க்கத்திலுள்ளோர் தேவர் எனப்படுவர். அவர்க்கு அமிழ்தமும், பூமியில் மக்கள் இடும் அவியும் உணவு ஆகும் என்பதை,

இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும் (புறநா. 182)
அவியுணவினோர் புறங்காப்ப (புறநா. 377)
செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்ருரோ டொப்பர் நிலத்து (திருக். 413)

முதலிய அடிகளால் அறியப்படுகின்றது. அவர் அமரர்

(பட்டினப். 184; கலித். 2, 2), புத்தேளிர் (கலித். 82, 4),

உயர்ந்தோர் (பதிஷ். 74, 89), இமையார் (அகநா. 136) முதலிய சொற்களாற் குறிக்கப்படுகின்றனர்.

முப்பத்துமூன்று தேவர்கள் எனப்பட்டவர் பன்னிரண்டு ஆதித்தியர்களும், இரண்டு அச்வினர்களும், எட்டு வஸுக்களும் பதினொன்று ருத்திரர்களும் ஆவர் என்பதை ஆசிரியனல்லந்துவ ஞர் பரிபாடல் எட்டாம் பாடலிற் குறிக்கின்றனர். இவரெல் லாம் மும்மூர்த்திகளுடனும்முருகனைக் காண வந்தனர் என்பதை ஆங்கே கூறுகின்றனர்.

தேவர்கட்குப் பகைவர் அவுணர். அவருள் முப்புரத்தோனும் சூரபன்மாவுஞ் சிறந்தவர் ஆவர். முப்புரத்தோனைச் சிவபிரான் அழித்ததாக,

ஓங்குமலைப் பெருவிற் பாம்புஞாண் கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கு மொருகண் போல (புறநா. 55)
ஆதி யந்தண னறிந்துபரி கொளுவ
வேத மாபூண் வையத்தே ரூர்ந்து
நாக நாண மலைவில் லாக
மூவகை ஆரெயி லோரழ லம்பின் முளிய (பரிபா. 5)
தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கான் முகம்போல (கலித். பாலை. 1)

என்ற அடிகளில் நன்கு வர்ணிக்கப்பட்டுளது.

சிவபிரான் ஒரே அம்பினால் மூவெயிலையும் அழித்தனர் என்பதை,

ஏகபாணேந தம் தேவஸ் த்ரிபுரம் பரமேச்வர: ।
நிஜவ்நே ஸாஸுரகணம் தேவதேவோ மஹேச்வர: ॥
(ம. பா. கர்ண. 27,)

என்ற செய்யுள் கூறுகின்றது.

அப்போது பூமி தேராகவும், வேதங்கள் குதிரையாகவும், பிரும்மா தேர்ப்பாகனாகவும் இருந்தனர் என்பதை

ஏவம் ருத்ரஸ்ய க்ஷிதவாந் ஸாரத்யம் து பிதாமஹ:
(ம. பா. கர்ண. 27, 42)
தயைவ வேதாஸ் ஹயா ரதாரூடா ஸசைலா
சாயோ மஹாத்மந: (ம. பா. கர்ண. 27, 8)

என்ற அடிகள் கூறுகின்றன.

தேவர்கள் பிரும்மாவை முன்னிட்டுச் சிவபிரானிடஞ் சென்று முப்புரத்தை அழிக்கவேண்டினர் என்பதை,

தே தேவாஸ்தேந வாக்யேந சோதிதா:
ப்ரணத: ஸ்திதா: ।
ப்ரஹ்மாணம் அக்ரத: க்ருத்வா சரண்யம் சரணம்கதா:
(ம. பா. கர்ண. 24)

ஸத்க்ருத்ய சங்கரம் ப்ராஹ ப்ரஹ்மா
லோகபிதாமஹ: ।
இமாந்யஸுர ஸைந்யாணி லோகாம்ஸ்த்ரீந்
ஆக்ரமந்தி ஹி (ம. பா. கர்ண. 25)

என்ற அடிகள் அறிவிக்கின்றன.

சூரபன்மாவை முருகக்கடவுள் அழித்ததாக

அணங்குடை யவுண ரேமம் புணர்க்குஞ்
சூருடை முழுமுத றடிந்த பேரிசைக்
கடுஞ்சின விறல்வேள் களிறூர்ந் தாங்கு (பதிற். 11)
சூர்நவை முருகன் (புறநா. 23)
சூர்முத றடிந்த சுடரிலை நெடுவேல் (திருமுருகு. 46)
சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேற்
சினமிகு முருகன் (அகநா. 59)

சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே (பரிபா. 14)
முதலிய அடிகள் கூறும்.

அவுணரது கூட்டம் சூரியனைக் கவர்ந்து சென்ற காரணத்தால் உலகெல்லாம் இருள, அவனை அவரிடமிருந்து திருமால் திரும்பிக்கொண்டுவந்ததாக,

அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தெனச்
சேண்விளங்கு சிறப்பின் ஞாயிறு காணாது
இருள்கண் கெடுத்த பருதி ஞாலத்து
இடும்பைகொள் பருவர றீரக் கடுந்திறல்
அஞ்சன வுருவன் றந்து நிறுத்தாங்கு (புறநா. 174)

என்ற அடிகளிற் கூறப்பட்டது.

அவுணரையும் கடவுளே படைத்தனர் என

அவுணர்க்கு முதல்வனீ (பரிபா. 3)

என்ற அடி கூறும்.

தேவர்களுள் பித்ருதேவர்கள் என்பவர் ஒரு வகையினர். அவர் தெற்கு திசையில் உள்ளனர். அவர்க்கு மக்கள் செய்ய

வேண்டிய கடன் ஆண்மகவைப் பிறப்பித்தல் ஆகும். இக் கருத்துக்கள்

தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்

பொன்போற் புதல்வர்ப் பெறூஉ தீரும் (புறநா. 9)

என்றவிடத்து அமைந்து கிடக்கின்றன.

தென்புலத்தாரைப் போற்றுதல் தேவர்களைப் போற்றுதலைக் காட்டிலும் சிறந்தது என்பதை அறிவிக்கவே 'தென்புலத்தார் தெய்வம் ....' என்ற குறளில் ஆசிரியர் திருவள்ளுவனார் தென் புலத்தாரை முன்னர்ப் படித்தனர். அவர் கோபமற்றவர் என் றும், பரமசுத்தர் என்றும், எப்போதும் பிரும்மசாரிகள் என்றும்

அக்ரோதனா: சௌசபரா: ஸததம் ப்ரம்ஹசாரிண: ।

என்ற மநுஸ்மிருதியடி கூறும்.

வருணன் நெய்தல் நிலத்திற்குத் தெய்வம் எனத் தொல் காப்பியங் கூறும் :—

வருணன் மேய பெருமண லுலகம் (தொல். அகத். 5)

தேவர்களுள் மன்மதன் ஒருவன் என்றும் அவனுடைய மனைவி இரதி என்பதும்,

இரதி காம னிவளிவ னெனூஉ (பரிபா. 19, 48)

என்ற அடியாற் குறிக்கப்பட்டன.

மஹாப்பிரளயத்தில் ஜீவர்களனைவரும் கடவுளிடத்தில் லயிக்கின்றனர் என்பது

தொல்லூழி தடுமாறித் தொகல்வேண்டும் பருவத்தால்
பல்வயி னுயிரெல்லாம் படைத்தான்கட் பெயர்ப்பான்
போல் (கலித். 129)

என்றவிடத்துக் கூறப்பட்டது. இக்கருத்தினை மஹாபாரதம்

நாராயணாஜ் ஜகத் ஸர்வம் ஸர்ககாலே ப்ரஜாயதே ।
தஸ்மிந்நேவ புநஸ்தச்ச ப்ரளயே ஸம்ப்ரலீயதே ॥
(ம. பா. அநுசா. 86, 8)

என்ற செய்யுளிற் கூறும்.

(5) தெய்வங்கள்

பிரும்மா, திருமால், சிவபிரான், முருகன் இவர்களைப்பற்றி மிகுதியாகவும், பலராமன், கொற்றவை இவர்களைப்பற்றி ஆங்காங்கும் நூல்கள் வர்ணிக்கின்றன.

பிரும்மா

உலகம் தோன்றத் தொடங்கும்போது பிரும்மா முதலில் தோன்றினர் என்பதும், அவர் தோன்றிய இடம் திருமாலின் கொப்பூழிற் றோன்றிய தாமரைப்பொகுட்டு என்பதும், அவர்க்கு முகம் நான்கு என்பதும், அவரது வாஹனம் அன்னம் என்பதும் பின்னருள்ள அடிகள் கூறுகின்றன :—

தொடங்கற்கட் டோன்றிய முதியவன் (கலித். 2)
நீனிற வுருவி னெடியோன் கொப்பூழ்
நான்முக வொருவற் பயந்த பல்லிதழ்த்
தாமரைப் பொகுட்டின் (பெரும்பாண். 402—4)
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவன் (திருமுருகு. 164—5)
மலர்மிசை முதல்வன் (பரிபா. 8, 3)
முகநான்குடையானை (இனியவை, 1)
அன வூர்தியை (இன்னா. 1)

திருமால் உலகத்தைப் படைக்கவேண்டும் என நினைத்த போதே அவர் கொப்பூழிலிருந்து தாமரை தோன்ற, அதனில் நான்முகத்தைக் கொண்ட பிரும்மா தோன்றினர் என மஹாபாரதம்,

ப்ரயாந ஸமகாலந்து ப்ரஜாஹேதோ: ஸநாதந: ।
யாதமாத்ரே து ஹவாந் நாஹ்யாம் பத்ம: ஸமுத்தித: ।
தத: சதுர்முகோ ப்ரஹ்மா நாபிபத்மாத்
விநிஸ்ஸ்ருத: ॥ (ம. பா. வந. 273)

என்ற அடிகளிற் கூறுகின்றது.

திருமால்

திருமால் முல்லைநிலக்கடவுள் :—

மாயோன் மேய காடுறை யுலகமும் (தொல். அகத். 5).

அவர் கைகளிற் சங்கையுஞ் சக்கரத்தையுங்கொண்டு மார்பில் இலக்குமியைத் தாங்கினர் :—

நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மாஅல் (முல்லைப். 1—3)
திருமறு மார்பின் முந்நீர் வண்ணன்
(பெரும்பாண். 29—30)
புகழ்நேமித் திருமறு மார்பன் (கலித். 104)
வள்ளுரு ணேமியான் வாய்வைத்த வளைபோல (கலித். 105)
மாயவன் மார்பிற் றிருப்போல் (கலித். 145)
சக்கரத்தனை (இனா. 1)

அவர் நீலநிறத்தவர் :—

அஞ்சன வுருவன் (புறநா. 174)
முந்நீர் வண்ணன் (பெரும்பாண். 30)
பொருகடல் வண்ணன் (கார். 1)
இருள்பரந் தாழியான் றன்னிறம்போல்
(திணைமாலை. 150, 96)

தாமரைக்கண்ணர் :—

தாமரை புரையுங் கண்ணன் (பரிபா, 15, 49)

பீதாம்பரத்தைத் தரித்தவர்:—

மணிவரை யூர்ந்த மங்குன் ஞாயிற்று
அணிவனப் பமைந்த பூந்துகில் (பரிபா. 13, 1—2)

மார்பில் மாலையையும் திருத்துழாயினையும் அணிந்தவர்:—

மண்மிசை யவிழ்த்துழாய் மலர்தரு செல்வத்து
(பரிபா. 8)
துழாய் மாலை யானை (இனியவை. 1)

கருடக்கொடியோன்:—

விண்ணுயர் புட்கொடி விறல்வெய் யோனும்
(புறநா. 56, 6)
புள்ளுப்பொறி புனைகொடி (பரிபா. 13, 4)
புண்மிசைக் கொடியோனும் (பரிபா. 82)
செவ்வா யுவணத் துயர்கொடி யோயே (பரிபா. 2, 60)

அவரது ஜன்மநட்சத்திரம் திருவோணம்:—

மாயோன் மேய வோண நன்னாள் (மதுரைக். 591)

அவரே மூன்று ரூபங்களைக் கொண்ட பரம்பொருள் :—

மூவுரு வாகிய தலைபிரி யொருவனை (பரிபா. 13, 37)

பலிசக்கரவர்த்தியின் வலியைக் குறைக்க மூவுலகினையுங் காலால் அளந்தவர்:—

ஞாலமூன் றடித்தாய் முதல்வர்க்கு (கலித். 124, 1)

பிரஹ்லாதனுக்காக அவனுடைய தந்தையைக் கொன்றனர்:—

பிருங்க லாதன் பலபல பிணிபட
வலந்துழி, மலர்ந்த நோய்கூர் கூம்பிய நடுக்கத்
தவர்ந்த புகழோன் றாதை யாகலி
னிகழ்வோன், இகழா நெஞ்சின னாகநீ யிகழா
நன்று நட்டவவ னன்மார்பு முயங்கி

....

வெடிபடா வொடிதூட் டடியொடு
தடிதடி பலபட வகிர்வாய்த்த வுகிரினை
(பரிபா. 4, 12—21)

கேசி என்ற அஸுரனைக் கொன்றனர் :—

வாய்பகுத் திட்டுப் புடைத்தஞான் றினன்கொல்
மாயோன் (கலித். 103, 53—55)

அவுணர் சூர்யனைக் கொண்டு ஒளிக்கத் திருமால் அதனை மீட்டனர்.

அணங்குடை யவுணர் கணங்கொண் டொளித்தென
(புறநா. 174, 1—5)

இச்செய்தி மஹாபாரதத்திற் சிறிது வேறுபட்டிருக்கின்றது. பாற்கடலிலிருந்து வந்த அமிழ்தத்தைத் திருமால் தேவர்களுக்கு அளிக்கும்போது அக்கூட்டத்தில் ராகு இருந்ததாகச் சூரியன் அவர்க்கு அறிவித்தான். அதற்கு வெகுண்டு ராகு சூரியனை வருத்த, அதனை ஏனைய தேவர்கள் கவனிக்கவில்லை. அவர்பால் சூரியன் வெகுண்டு அஸ்தகிரியில் மறைய, தேவர்கள் இருளால் துன்புற்று, பிரும்மாவிடம் அறிவித்தனர். அவர் சூரியனுக்குத் தீங்கு வாராதபடி தேவர்களை விட்டு அருணனைப் படைக்கச்செய்து சூரியனுக்கு அவனைத் தேரோட்டி ஆக்கினர். அப்போது சூரியனது கோபம் தணிந்தது.

சந்த்ரார்க்காஹ்ராம் யதா ராஹுர் ஆவஹ்ராதோ
ஹ்யம்ருதம் பிபந் ।
வைராநுபந்யம் க்ருதவாந் சந்த்ராஜித்யௌ
ததாநக ।
பாயஹ்மாநம் ம்ரஹேணாய ஹ்யாதித்யம்
மந்யுராவிசத் ।

....

தத: பிதாமஹாஜ்ஞாத° ஸர்வம் சக்ரே ததாருண: ।
உதிதஸ்சைவ ஸவிதா ஹ்யருணேந ஸமாவ்ருத: ॥
(ம. பா. ஆதி. 24, 6—19)

திருமாலைப்பற்றி முன்னர்க் கூறப்பட்ட செய்திகள்
சங்வசக்ரகதாபாணி: பீதவாஸா ஜகத்பதி:
(ராமா. 1, 15, 16)

சங்வசக்ரகதாபாணே த்வாரகாநிலயாச்யுத ।
கோவிந்த புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம் சரணாகதாம் ॥
(ம. பா. ஸபா.)

முதலிய செய்யுட்களில் இராமாயணம், மஹாபாரதம் இவற்றுள் நன்கு உணர்த்தப்பட்டன.

மூன்று உலகங்களையும் மூன்று அடிகளால் அவர் அளந்தார் என்பதை மாத்திரம் ருக்வேதமே கூறும்.

யஸ்யோருஷு த்ரிஷு விக்ரமணேஷு அதிக்ஷியந்தி
புவநாநி விச்வா (1, 155, 2)

சிவபிரான்

சிவபிரானும் திருமாலும் இருபெருந்தெய்வம் என அகநானூறு

வெருவரு கடுந்திற லிருபெருந் தெய்வத்து (360, 6)

என்றவிடத்துக் கூறுகின்றது.

சிவபிரான் சடையிற் கங்கையைத் தரிக்கின்றனர்.

ஈர்ஞ்சடை யந்தணன் (கலித். 38, 1)
பிறங்குநீர் சடைக்கரந்தான் (கலித். 150, 9)

நெற்றியிற் பிறைச்சந்திரனைக் கொண்டார்.

பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி (புறநா. 91, 5)

கொலைவன் சூடிய குழவித் திங்கள்போல் (கலித். 103, 15)

மூன்று கண்களை உடையவர் :—

முக்கட் செல்வர் (புறநா. 6, 18)
முக்கண்ணான் (கலித். 2, 4)
கண்மூன்றுடையான் (இனியவை. 1)
முக்கட்பகவன் (இன்னா. 1)

கையில் மழுவை ஏந்தியுள்ளார்:—

மழுவாணெடியோன் (அகநா. 220, 5)
மாற்றருங் கணிச்சி மணிமிடற் றோனும்
(புறநா. 56, 2)

விருஷபத்தை வாகனமாகக் கொண்டார் :—

புங்கவமூர்வோன் (பரிபா. 8, 2)

நஞ்சினை உண்டு நீலகண்டர் ஆனார்:—

காரி யுண்டிக் கடவுள் (மலைமடு. 83)
நீல மணிமிடற் றொருவன் (புறநா. 91, 6)
மணிமிடற்று மாண்மலர்க் கொன்றையவன்
(கலித். 142)
மறுமிடற் றண்ணற்கு (பரிபா. 8, 127; 9, 7)

இக்கருத்துக்களெல்லாம்

திரோஹாவயிதும் பாஹும் சக்ரே த்ரிநயனஸ் ததா ।
(ராமா. 1, 43, 7)
தோஷயஸ்வ மஹாதேவம் நீலகண்டம் உமாபதிம் ॥
(உத்தரரா. 16, 32)
நமோ தேவாதிதேவாய நம: சசிகலாதர ।
நமோ பூதபதே சம்போ ஜஹ்நுகந்யாம்புசேகர ॥
பவ ஸர்வபூதேச சூலபாணே வ்ருஷபத்வஜ ।
பவ தேவதேவேச த்ரிநேத்ர வ்ருஷபத்வஜ ॥
(ம. பா. அநுசா. 207)
யஸ்மாத்து நீலதா கண்டே நீலகண்டஸ் ததஸ் ஸ்ம்ருத: ।
(ம. பா. ஆதி. 18, 26)

முதலிய ராமாயணமஹாபாரதவாக்கியங்களிற் காணப்படுகின்றன.

அவர் திருவாதிரையிற் பிறந்தவர் என்பதை

அரும்பெற லாதிரை யான். (150, 20)

என்ற கலித்தொகையடி கூறும்.

அவர் ஆலமரத்தடியில் வீற்றிருப்பார் :—

நான்மறை முதுநூல் முக்கட் செல்வன்
ஆல முற்றங் கவின்பெறத் தைஇ. (அகநா. 181)
ஆல்கெழு கடவுட் புதல்வ. (திருமுருகு. 256)

உமையை மனைவியாகக் கொண்டனர் :—

வெள்ளேறு
வலவயி னுயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கு மிமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்.
(திருமுருகு. 151–4)
பைங்கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காம வதுவையுள்
(பரிபா. 5, 27–8)

ஒட்டிய காத லுமையா ளொருபாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானுங்
கொண்டானே. (பழமொழி, 124)

அவர் ஐம்பெரும்பூதத்தைப் படைத்தனர் :—

நீரு நிலனுந் தீயும் வளியும்
மாக விசும்போ டைந்துட னியற்றிய
மழுவா ணெடியோன். (மதுரைக். 453–5)

உரிய காலத்தில் உலகத்தை அழிப்பார் :—

காய்கடவுள் (பரிபா. 5, 13)
கொலைவன் (கலித். 103, 15)

அவர் கைலாயத்தில் உமாதேவியோடு உல்லாஸமாக இருக்கும்போது, அவரைத் துன்புறுத்த எண்ணி, இராவணன் அம்மலையைத் தூக்க, அப்போது அவர் கால்விரலால் அதனை அழுத்த, அவன் துன்புற்றுக் கதறினன் என்பதை,

இமையவில் வாங்கிய வீர்ஞ்சடை யந்தணன்
உமையமர்ந் துயர்மலை யிருந்தன னாக

ஐயிரு தலையி னரக்கர் கோமான்
தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லா துழப்பவன் போல. (38)

என்ற கலித்தொகையடிகள் கூறுகின்றன.

இக்கருத்தினையே உத்தரராமாயணத்திலுள்ள பின்வருஞ் செய்யுட்கள் கூறும் :—

ததः பார்ச்வம் உபாமம்ய ஹவஸ்யாநுசரோऽப்ரவீத் ।

....

நிவர்த்தஸ்வ உசக்ரீவ சைலே க்ரீடதி சங்கர: ॥

....

தமிமம் சைலம் உந்மூலங் கரோமி தவ மோபதே ।

....

இத்யுக்த்வா ததோ ராம ஹுஜாந்நிக்ஷிப்ய பர்வதே ॥
தோலயாமாஸ தம் சீக்ரம் ஸ சைலஸ் ஸமகம்பத ।

....

சசால பார்வதீ சாபி தஹாச்லிஷ்டா மஹேச்வரம் ।
ததோ ராம மஹாதேவோ தேவாநாம் ப்ரவரோ ஹர: ।
பாதாங்குஷ்டேந தம் சைலம் பீடயாமாஸ லீலயா ।
பீடிதாஸ்து ததஸ்தஸ்ய சைலஸ்யாயோபதா ஹுஜா: ।

....

ரக்ஷஸா தேந ரோஷாச்ச ஹுஜாநாம் பீடநாத் ததா ।
முக்தோ விராவ: ஸஹஸா த்ரைலோக்யம் யேந
கம்பிதம் (16, 9–29)

மூன்று கோட்டைகளை உடைய அவுணன் தேவர்களைத் துன்புறுத்தினன். அவர்கள் பிரும்மாவை முன்னிட்டுச் சிவ பிரானிடம் தமது துன்பத்தை அறிவித்தனர். அவர் அவனைக் கொல்வதாக ஒத்துக்கொண்டனர். அப்போது பூமி ரதமாக வும், வேதங்கள் குதிரைகளாகவும், பிரும்மா தேரோட்டியாக வும், விஷ்ணு அம்பாகவும், மேருமலை வில்லாகவும், வாஸுகி நாண் ஆகவும் ஆய் அவர்க்கு உதவி புரிந்தனர். சிவபிரான் ஒரே அம்பால் அம்மூன்று கோட்டைகளையும் அழித்து, அவு ணனைத் தோல்வியுறச் செய்து தேவர்களை வெற்றிபெறச் செய்த னர். இச்செய்தி பரிபாடல், புறநானூறு, கலித்தொகை இவற் றிற் காணப்படுகின்றது :—

ஆதி யந்தண னறிந்துபரி கொளுவ
வேத மாபூண் வையத்தே ரூர்ந்து

நாக நாண மலைவில் லாக
மூவகை
ஆரெயி லோரழ லம்பின் முளிய
மாதிர மழலவெய் தமரர் வேள்வி (பரிபா. 5, 22-6)
ஓங்குமலைப் பெருவிற் பாம்பு ஞாண்கொளீஇ
ஒருகணை கொண்டு மூவெயி லுடற்றிப்
பெருவிற லமரர்க்கு வென்றி தந்த
கறைமிடற் றண்ணல். (புறநா. 55)
தொடங்கற்கட் டோன்றிய முதியவன் முதலாக
அடங்காதார் மிடல்சாய வமரர்வந் திரத்தலின்
மடங்கல்போற் சினைஇ மாயஞ்செ யவுணரைக்
கடந்தடு முன்பொடு முக்கண்ணான் மூவெயிலும்
உடன்றக்கான் முகம்போல. (கலித். 2)

இக்கருத்து மாஹபாரதம் கர்ணபர்வத்தில் பல்லிடங்களில் உணர்த்தப்பட்டுள்ளது.

ஏவம் ருத்ரஸ்ய க்ருதவாந் ஸாரத்யந் து பிதாமஹ:
(27, 42)

ததைவ வேதா: ச ஹயா ரதோ தூர்ய-
யரா ஸசைலா ச ரதோ மஹாத்மந: । (27, 8)
தே தேவாஸ் தேந வாக்யேந சோதிதா: ப்ரணத:
ஸ்திதா: ।
ப்ரஹ்மாணம் அப்ருவந்: க்ருத்வா சரண்யம் சரணாகதா: ॥
தேவதேவம் பரம் ஸ்தாணும் வரதம் த்ர்யம்பகம் சிவம் ।
(24, 50-2)

ஸத்க்ருத்ய சங்கரம் ப்ராஹ ப்ரஹ்மா லோகபிதாமஹ: ।
இமாந்யஸுரதுர்காணி லோகாம்ஸ்த்ரீந் ஆக்ரமந்தி
ஹி ॥ (25, 1-2)

ஏகபாணேந தம் தேவாஸ் த்ரிபுரம் பரமேச்வர: ।
நிஜக்நே ஸாஸுரகணம் தேவதேவோ மஹேச்வர: ॥
(27, 35)

சிந்தயித்வா ஹரிம் விஷ்ணும் அவ்யயம் யஜ்ஞவாஹநம் ।
சரம் ஸங்கல்பயாஞ்சக்ரே விச்வகர்மா மஹாமநா: ॥
(30, 31)

கி. மு. இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே சிவபிரானுக்குக் கோயில்கள் கட்டப்பட்டன என்பதும், அவற்றை மக்கள் வலம் வந்தனர் என்பதும்,

பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே. (6, 16–7)

என்ற புறநானூற்றடிகளால் அறியக்கிடக்கின்றது. பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறனை மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார், சிவபிரான் பலராமன் திருமால் முருகன் இந்நால்வருக்கும் புறநானூறு 56 ஆம் செய்யுளில் ஒப்பிடுகின்றனர்.

முருகன்

முருகன் குறிஞ்சிநிலக்கடவுள் எனத் தொல்காப்பியம் கூறும்.

சேயோன் மேய மைவரை யுலகமும்
(தொல். அகத். 5).

மேலான கதியாகிய மோக்ஷம் வேண்டுமாயின், முருகனை ஆறு படை வீடுகளினுஞ் சென்று தொழுதல் வேண்டும் என நக்கீரனார் திருமுருகாற்றுப்படையிற் கூறினர். பகவத்கீதையிற் கண்ணபிரான் ஆத்மவிபூதியைக் கூறுமிடத்து

ஸேநாநீநாம் அஹம் ஸ்கந்த: (10, 24)

எனக் கூறுவதை நோக்கின், முருகனைப் போர்வீரனாக உபாஸித்தலே சிறந்ததோ எனத் தோன்றுகின்றது. இக்காரணம்பற்றியே திருவையாற்றில் ஐயாறப்பன்கோயிலில் முருகன் வில்லோடு இருத்தலைக் காண்க.

அவரது பிறப்பைப்பற்றிப் பின்வருமாறு பரிபாடல் கூறும் :—ஒருபோது சிவபிரானும் உமாதேவியும் உல்லாஸமாய் இருந்தனர். அப்போது அவர்க்கு ஆண்மகன் பிறப்பின், அவன் உலகிற் சிறந்தானாக விளங்குவான் என்றும் அதனாற் றனக்குத் தீங்கு நேரிடும் என இந்திரன் நினைத்தான். உடனே தேவர்களுடன் சிவபிரானிடஞ் சென்று தனது விருப்பத்தை அறிவித்தனன். அவர் அதற்கு உடன்பட்டனர். ஆயினும் அவரது ரேதஸ் சிறிது கீழே விழ, அப்போது அங்கே வந்த அக்னி அதனைக் கொண்டனன். அதனை ஹவிஸ்ஸாகக் கொண்டு ஏழு ருஷிகளும் யாகம் செய்தனர். எஞ்சிய ஹவிஸ்ஸை அருந்ததியைத் தவிர்த்து ஆறு ருஷிபத்னிகளும் உண்டனர். ஒவ்வொருவர்க்கும் ஒரு குழந்தை பிறந்தது. அவற்றைக் கங்கைக் கரையில் சரவணத்தில் விட்டனர். பின்னர் ஆகாயமார்க்கமாய்ச் சிவபிரானும் உமாதேவியும் போகும்போது, தேவி அக்

குழந்தைகளைப் பார்த்து அவை யாருடையவை எனக் கேட்க, அவளுடையனவே என அவர் விடையளித்தனர். உடனே அவ்விருவரும் அங்கே செல்ல, அவள் குழந்தைகளை மடியில் வைக்க, அவை ஆறுமுகங்களை உடைய ஒரே குழந்தை ஆயிற்று. அக்குழந்தையே முருகன் :—

அமரர் வேள்விப்
பாக முண்ட பைங்கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காம வதுவையுள்
அமையாப் புணர்ச்சி யமைய நெற்றி
இமையா நாட்டத் தொருவரங் கொண்டு
விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்
விரிகதிர் மணிப்பூ ணவற்குத்தா னீத்த
தரிதென மாற்றான் வாய்மைய னாதலின்
எரிகனன் ரூனைக் குடாரிகொண் டவனுருவு
திரித்திட் டோனிவ் வுலகேழு மருளக்
கருப்பெற்றுக் கொண்டோர் கழிந்தசே யாக்கை
நொசிப்பி னேழுறு முனிவர் நனியுணர்ந்து
வசித்ததைக் கண்ட மாக மாதவர்
மனைவியர் நிறைவயின் வசிதடி சமைப்பின்
சாலார் தானே தரிக்கென வவரவி
உடன்பெய் தோரே யழல்வேட் டவ்வவித்
தடவுநிமிர் முத்தீப் பேணியமன் னெச்சில்
வடவயின் விளங்கா லுறையெழு மகளிருள்
கடவு ளொருமீன் சாலினி யொழிய
அறுவர் மற்றையோரு மந்நிலை யயின்றனர்
மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாஅது நிற்சூ லினரே
நிவந்தோங் கிமயத்து நீலப்பைஞ் சுனைப்
பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயற்
பெரும்பெயர் முருக (பரிபா. 5, 26—50)

இம்முருகன்பிறப்பினையே மஹாபாரதம் அநுசாஸநபர்வம் வநபர்வம் முதலியவற்றில் சிற்சில மாறுபாட்டுடன் கூறும். அநுசாஸநபர்வத்தில் 130, 133 அத்தியாயங்களும் வநபர்வத்தில் 227 அத்தியாயமும் நோக்கத்தக்கன. வால்மீகிராமாயணத்திலும் பாலகாண்டம் 36, 37 ஸர்க்கங்களில் இக்கருத்தே சுருக்கமாய் வர்ணிக்கப்பட்டது.

பிறந்த குழந்தையைப் பார்க்க மும்மூர்த்தியும் இந்திரனும்

தேவர் முப்பத்துமூவரும் வந்தனர் என்பதைத் திருமுருகாற்றுப் படையும் பரிபாடலுங் கூறும் :—

புள்ளணி நீள்கொடிச் செல்வனும் ....
....
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து
....
எருத்த மேறித் திருக்கிளர் செல்வனும்
...
நான்முக வொருவற் சுட்டிக் காண்வர
....
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு
.... (திருமுருகு. 151—173)

மண்மிசை யவிழ்துழாய் மலர்தரு செல்வத்துப்
புண்மிசைக் கொடியோனும் புங்கவ மூர்வோனும்
மலர்மிசை முதல்வனு மற்றவ னிடைத்தோன்றி
உலகிரு ளகற்றிய பதின்மரு மிருவரும்
மருந்துரை யிருவருந் திருந்துநூ லெண்மரும்
மாதிரை முதல்வனிற் கிளந்த
நாதர்பன் னொருவரும் (பரிபா. 8)

இக்கருத்தினையே மஹாபாரதம்

ததோ தேவாஸ் த்ரயஸ்த்ரிம்சத் ஸர்வே ஸஹ
ஸுரேச்வரா: |
ருத்ரோ தாதா ச விஷ்ணு: ச யம: பூஷார்யமா பக: |
....
ப்ரஹ்ருஷ்டாநி சாங்காநி யாநி தேவகணாநி ச |
ஆஜக்முஸ் தேவதேவஸ்ய த்ரஷ்டும் குமாரஞ்
ஜ்வலநாத்மஜம் || (ம. பா. அநு. 133, 15—17)

என்றவிடத்து உணர்த்தும்.

வந்த தேவர்கள் ஒவ்வொருவரும் ஒரு விளையாட்டுக்கருவியைக் கந்தனுக்கு அளித்தனர் என்பதைப் பரிபாடல் கூறுகின்றது.

அனலன் றன்மெய்யிற் பிரித்துச்
செல்வ வாரணங் கொடுத்தோன் வானத்து
வழங்கெழு செல்வன்றன் மெய்யிற் பிரித்துத்
திகழ்பொறிப் பீலி யணிமயில் கொடுத்தோன்

திருந்துகோன் ஞமன்றன் மெய்யிற் பிரிவித்து
இருங்கண் வெள்யாட் டெழின்மறி கொடுத்தோன்
ஆஅங்கு
அவரும் பிறரு மமர்ந்துபடை யளித்த
மறியு மஞ்ஞையும் வாரணச் சேவலும்
பொறிவரிச் சாபமு மானும் வாளும்
செறியிலை யீட்டியுங் குடாரியுங் கணிச்சியும்
தெறுகதிர்க் கனலியு மாலையு மணியும்
(பரிபா. 5, 57—70)

இதனையே மஹாபாரதம் அநுசாஸனபர்வம் கூறும். ஆனால் சிறிது மாறுபாடு உளது.

ததோ தேவா: ப்ரியாண்யஸ்ய ஸர்வ ஏவ ஸமாஹரந் ।
....
ஸுபர்ணோஸ்ய ததௌ புத்ரம் மயூரம்
சித்ரபர்ஹிணம் ।
....
குக்குடஞ் சாக்நிஸங்காசம் ப்ரததௌ அருண:
ஸ்வயம் । (133, 20—25)

பின்னர் இந்திரனுடைய தானைக்குத் தலைவனாகித் தாரகாஸுரனைக் கொன்றனன் என்பது

வானோர் வணங்குவிற் றானைத் தலைவ.
(திருமுருகு. 260)
சூர்மருங் கறுத்த சுடரிலை நெடுவேல்
சினமிகு முருகன் தண்பரங் குன்றத்து. (அகநா. 59)
சூர்நவை முருகன் சுற்றத் தன்ன (புறநா. 23)
சூர்கொன்ற செவ்வேலால் (கலித். 93, 26)
சூர்மருங் கறுத்த சுடர்ப்படை யோயே.
(பரிபா. 14, 18)
செங்களம் படக்கொன் றவுணர்த் தேய்த்த
....
கழறொடிச் சேஎய் குன்றம் (குறுந்தொகை. 1)

என்றவிடங்களிற் கூறப்பட்டது.

இதனையே மஹாபாரதம் அநுசாஸநபர்வம்

ஸைநாபத்யேந தம் தேவா: பூஜயித்வா குஹாலயம் ।
....

ஸ விம்ருஜோ மஹாவீர்யோ தேவஸேநாபதி:
ப்ரபு: ।
ஜகாநதாமோகயா சக்த்யா தாநவம் தாரகம்
மஹா: ॥ (133, 28–9)

என்றவிடத்துக் கூறும்.

அவர் ஆயுதம் சக்தி எவ்வாறு என்பது எவ்வாறு மஹா பாரதத்திற் கூறப்பட்டதோ, அவ்வாறே இன்னு நாற்பது முதற் பாட்டிற் கூறப்பட்டது.

அவருடைய கொடியிற் கோழி பொறிக்கப்பட்டது என் பதை

மணிநிற மஞ்ஞை யோங்கிய புட்கொடி
பிணிமுக மூர்ந்த வெல்போ ரிறைவ.
(பரிபா. 17, 48–9)

என்ற அடிகள் கூறுகின்றன.

போரில் வெற்றிபெற்ற பின்னர் அவர் தேவஸேனையையும் வள்ளியையும் மணந்தனர் என்பது

மையிருநூற் றிமையுண்கண் மான்மறிதோண்
மணந்த ஞான்று
ஐயிருநூற்று மெய்ந்நயனத் தவன்மகண் மலருண்கண்
மணிமழை தலைஇயென (பரிபா. 9, 8–10)

என்றவிடத்து உணர்த்தப்பட்டது. அவன் வள்ளியை மணந் ததை மஹாபாரதம் கூறியதாகத் தெரியவில்லை.

பலராமன்

பலராமன் வெண்ணிறமுடையோன், நீலவாடை அணிந்த வன், கிருஷ்ணனுக்கு மூத்தோன், பனைக்கொடியோன், கலப் பையை ஆயுதமாக உடையோன் என்பதை

பானிற வுருவிற் பனைக்கொடி யோனும்
(புறநா. 58, 14)
அடல்வெந் நாஞ்சிற் பனைக்கொடி யோனும்
(புறநா. 56, 3–4)
பனைக்கொடிப் பானிற வண்ணன்போல்
(கலித். 104, 7–8)

வளையொடு புரையும் வாலி யோற்கவன்
இளைய னென்போர்க் கிளையை யாதலும்
புதையிரு ளுடுக்கைப் பொலம்பனைக் கொடியோற்கு
முதியையென் போர்க்கு முதுமை தோன்றலும்
(பரிபா. 2, 20-3)

நாஞ்சில் வலவனிறம்போல் (கார். 19)
பால்மேனியான் (பழமொழி 37, திணை 150, 96)

என்ற அடிகள் கூறும்.

கொற்றவை

போர் முதலியவற்றில் வெற்றி பெறுதற்கும், நினைத்த காரியம் நிறைவேறுதற்கும் மக்கள் கொற்றவையைப் போற்றுதல் வழக்கம் என்பதை

வெற்றி வேல்போர்க் கொற்றவை சிறுவ
(திருமுருகு. 258)

புலம்பொடு வதியு நலங்கிள ரரிவைக்கு
இன்னா வரும்படர் தீர விறைந்து
இன்னே முடிகதில் லம்ம (நெடுநல். 166-8)

என்ற அடிகள் கூறுகின்றன. கொற்றவை என்பதும் துர்க்கை என்பதும் ஒருபொருட்கிளவி. மஹாபாரதத்தில் விராடபர்வம் தொடங்குதற்கு முன்னர்த் தர்மபுத்திரனும், போர் தொடங்குதற்கு முன்னர் அர்ஜுனனும் துர்க்கையைத் துதிக்கின்றனர் :

நமோஸ்து வரதே க்ருஷ்ணே குமாரி ப்ரஹ்மசாரிணி
....
சரணம் பவ மே துர்கே சரண்யே பக்தவத்ஸலே
(ம. பா. விரா. 8)

நமஸ்தே ஸித்தஸேநாநி ஆர்யே மந்தரவாஸிநி
....
ஸ்ருதிர் ஸ்ம்ருதிமதாம் ஸ்ரேஷ்ட்டே வீக்ஷ்யஸே
ஸித்தசாரணை: (ம. பா. பீஷ்ம. 23)

(6) ஊழ்

முற்பிறப்புக்களிற் செய்யப்பட்ட வினைகளின் பயனைப் பின்னர் ஒவ்வொருவரும் அநுபவிப்பர். அதனை ஊழ், தெய்வம், வினை, பால் என்ற சொற்களாற் பெரியோர் குறிப்பர் :—

வினையே பூதம் .... (தொல். கிளவி. 57)

உடனுறை வாக்குக வுயர்ந்த பாலே (புறநா. 236, 12)
பால்வரைந் தமைத்த லல்லது (குறுந். 366)
யாஞ்செய் தொல்வினைக் கெவன்பே துற்றனை
(நற்றிணை. 88)

தொல்வினைப் பயன்றுய்ப்ப (கலித். 118, 3)

மக்கட்பிறப்பிற் பொருள் இன்பம் இவற்றை அனுபவிக்கப் பெரும்பாலும் ஊழே காரணமாயினும், தர்மத்தைச் செய்தற்குத் தன்முயற்சியே சிறந்த காரணம் ஆகும் என்பதை விளக்கவே ஆசிரியர் திருவள்ளுவனார் ஊழி என்ற அதிகாரத்தை அறத்துப் பாலின் பின்னரும் பொருட்பாலின் முன்னருங் கூறினர். ஆயினும் ஒருவர் இன்பதுன்பங்களை நுகர ஊழ், தன்முயற்சி இரண்டுங் காரணம் ஆகும் என்பதைக் குறிக்க இரண்டையுங் கூறுகின்றனர் :—

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும் (திருக். 380)
தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும் (திருக். 619)

இக்கருத்தினையே மஹாபாரதம் பல்லிடங்களிற் கூறுகின்றது.

வியிஸ்து ஸ்வயவாந் ஸ்ரம்ஹறந் தைஸ்தரம் ஹி
புரா க்ருதம் । (வன. 212, 2)
ஆபஸா மாநுஷா: ஸர்வே நிபஸா:
கர்மணோர் அயோ: ।
தைவே புருஷகாரே ச பரம் தாஹ்ராம் ந விதே்தே ।
ந ஹி தைவேந ஸியத்ந்தி கர்மாண்யேகேந ஸத்தம ।
ந சாபி கர்மணைகேந ஆஹ்ராம் விஸிஸ்து யோமத:
(ஸௌப்தி. 2, 2-3)
தைவே புருஷகாரே ச லோகோயம் ஸம்ப்ரதிஷ்டித: ।
(ஆதி. 132, 2)
தைவாயத்தமஹம் மந்யே ஜநம் ஸுபலிநாமபி
(த்ரோண. 159, 63)
க்ஷேத்ரம் புருஷகாரஸ்து தைவம் ஙீஜம்
உதாஹ்ருதம் (அநுசா. 9, 10)

சில வினைகளின் பயனை எழு பிறப்புக்களிலும் அனுபவிப்பர் :—

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றின்
எழுமையு மேமாப் புடைத்து (திருக். 125)

எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிவிளங்காப்
பண்புடை மக்கட் பெறின் (திருக். 62)
ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையும்
தான்புக் கழுந்து மளறு (திருக். 835)
ஒருமைக்கட் பின்கற்ற கல்வி யொருவற்கு
எழுமையு மேமாப் புடைத்து (திருக். 396)

சில வினைகளின் பயனை இம்மையிலேயே அனுபவிப்பதும் உண்டு :—

இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலும்
(திணைமாலை 150, 123)

இக்கருத்தினையே ஒரு வடமொழிச் செய்யுளடி கூறும் :—

அத்யுத்கடை: புண்யபாபைர் இஹைவ ஃபலம்
அச்நுதே ।

(7) ஏனைய செய்திகள்

வால்மீகிராமாயணத்திற் கூறப்பட்ட செய்திகளுள் சில சங்கநூல்களுட் காணப்படுகின்றன :—(1) இராவணன் ஸீதையைத் தூக்கிப்போம்போது, அவள் கீழே எறிந்த அணிகளைக் குரங்குக்கூட்டம் கண்டது :—

கடுந்தெற லிராம னுடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வௌவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாங்கு
(புறநா. 378, 18-21)

கடற்கரையில் இராமன் மந்திராலோசனை செய்தான் :—

முழங்கிரும் பௌவ மிரங்கு முன்றுறை
வெல்போ ரிராம னருமறைக் கவிந்த
பல்வீ ழாலம் போல (அகநா. 70, 14—16)

இராமனைத் துணையாகக்கொண்டு விபீஷணன் இலங்கைக்கு அரசன் ஆயினன் :—

பொலந்தா ரிராமன் றுணையாகத் தான்போந்து
இலங்கைக் கிழவற் கிளையான்—இலங்கைக்கே
போந்திறை யாயதூஉம் பெற்றான் (பழமொழி 257)

வ்யாஸமஹாபாரதத்திற் கூறப்பட்ட சில செய்திகளுங் காணப்படுகின்றன :—

பாண்டவரும் கௌரவரும் செய்த போரில் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதன் உணவு அளித்தனன்; அப் போரிற் கவுரவர் மாண்டனர் :—

அலங்குளைப் புரவி யைவரொடு சினைஇ
நிலந்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தொழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்
(புறநா. 2, 13—16)

ஈரைம் பதின்மரும் பொருதுகளத் தவியப்
பேரமர்க் கடந்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஆராச் செருவி னைவர் போல (பெரும்பாண், 415–7)
நூற்றுவர் மடங்க
வரிபுனை வல்வி லைவ ரட்ட
பொருகளம் போலுந் தொலூஉ (கலித். 104, 57—9)

குருடனை திருதராஷ்டிரனின் மூத்த குமாரனின் சூழ்ச்சியால் பாண்டவர் ஐவரும் இருந்த அரக்குமாளிகை தீக்கு இரையாயிற்று :—

வயக்குறு மண்டிலம் வடமொழிப் பெயர்பெற்ற
முகத்தவன் மக்களுண் முதியவன் புணர்ப்பினால்
ஐவரென் றுலகேத்து மரசர்க ளகத்தராகக்
கைபுனை யரக்கில்லைக் கதழெரி சூழ்ந்தாங்கு
(கலித். 25, 104)

பாண்டவர் குற்றமற்றவர்:—

தீதுசீர் சிறப்பி னைவர்க ணிலைபோல (கலித். 26, 6)

துரியோதனன் தொடையிற் கொல்லப்பட்டான் :—

மறந்தலைக் கொண்ட நூற்றுவர் தலைவனைக்
குறங்கறுத் திடுவான்போல் (கலித். 52, 2—3)

துரியோதனன் முதலியோர் பாண்டவரோடு சூதாடிப் பின்னர் அழிந்தனர் :—

பாரதத் துள்ளும் பணையந்தந் தாயமா
ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரொடு
ஏதில ராகி யிடைவிண்டா ராதலால்
காதலோ டாடா கவறு (பழமொழி. 356)

காண்டவவனத்தை அழித்த அருச்சுனற்குத் தமையனாகிய பீமஸேனன் அடிசிற்றொழிலிற் கைதேர்ந்தவன் :—

காவெரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் றன்முன்

பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வே றடிசில்
(சிறுபாண். 238—41)

பலராமன் துரியோதனற்கு நண்பராயினும் போரில் அவற்கு உதவி புரியவில்லை.

பாப்புக் கொடியாற்குப் பால்மேனி யான்போலத்
தாக்கி யமருள் தலைப்பெய்யா—போக்கி
வழியராய் நட்டார்க்கு (பழமொழி. 137)

தெற்கில் பாணாசுரன் பெரிய நிதியை வைத்திருந்தான் :—

தென்றல் மருங்கின விண்டு நிறைய
வாணன் வைத்த விழுநிதி பெறினும்
(மதுரைக். 202, 3)

பதிவ்ரதையிற் சிறந்தவள் அருந்ததி :—

வடமீன் புரையுங் கற்பின் மடமொழி (புறநா. 122, 8)

விசும்புவழங்கு மகளி ருள்ளுஞ் சிறந்த
செம்மீ னனையை (பதிற். 31, 27—8)

வடமீன்போற் றொழுதேத்த வயங்கிய கற்பினாள்
(கலித். 2, 21)

வடவயின் விளங்கா லுறையெழு மகளிருள்
கடவு ளொருமீன் சாலினி யொழிய
(பரிபா. 5, 43—4)

சிறுமீன் புரையுங் கற்பி னறுநுதல்
(பெரும்பாண், 303)

கணவனிடத்து ஒத்த அன்பு கொண்டவருள் ரோகிணி சிறந்தவள்:—

உரோகிணி நினைவன நோக்கி (நெடுநெல். 163)

இராமாயணத்திலும்

ரோஹிணீ சசிநம் யதா

என ஸுந்தரகாண்டத்திற் கூறப்பட்டுளது.

ஒவ்வொருவரும் பிறர்க்காகவே வாழ்தல் சிறந்ததெனக் கருதப்பட்டது :—

நமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுந ருண்மையானே
(புறநா. 183, 8—10)

பிறர்க்கென வாழ்திநீ (பதிற். 38, 16)

பிறப்பிற்குக் காரணம் ஸ்தூலசரீரமாகையாலும், கல்வி ஸூக்ஷ்மசரீரத்தைப்பற்றியதாகையாலும், பிறப்பினுங் கல்வி சிறந்தது எனக் கருதப்பட்டது. அக்காரணம்பற்றியே மேற் பிறப்பிற் பிறந்தவனுங் கீழ்ப்பிறப்பிற் பிறந்தவனிடங் கல்வி கற்கலாம் எனக் கூறப்பட்டது :—

வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே (புறநா. 183)
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றா ரனைத்திலர் பாடு (திருக். 409)

இக்கருத்தினையே ஒருவாறு கௌதமதர்மஸூத்ரம்

ஆபத்கல்போ ஃப்ராம்ஹ்ணஸ்ய அஃப்ராம்ஹணாத்
வித்³யோபயோக³: (1,7,1)

எனக் கூறும்.

அஷ்டமி, சதுர்த்தசி, பர்வாக்கள் முதலிய தினங்களில் வேதாத்தியயனம் செய்தல் தகாது.

அட்டமியு மேனை யுவாவும் பதினான்கும்
பார்ப்பார்
....
இலங்குநூ லோதா தநாள் (ஆசார. 39)

பகலில் தெற்கு நோக்கியும் இரவில் வடக்கு நோக்கியும் மலங்கழித்தல் தகாது :—

பகற்றெற்கு நோக்கா ரிரா வடக்கு நோக்கார்
(ஆசார. 29)

இக்கருத்தினையே கௌதமதர்மஸூத்ரம்

உஹே மூத்ரபுரீஷே து தி³வா குர்யாத்³ உத³ங்முக²:
ராத்ரௌ த³க்ஷிணாமுக²: (1, 9, 41 & 43)

என்றவிடத்துக் கூறும்.

விருந்தினர், மூத்தோர், இளையர் முதலியோர்க்கு உணவு அளித்தபின்னரே இல்லறத்தான் தான் உணவைக் கொள்ள வேண்டும் :—

விருந்தினர் மூத்தோர் பசுசிறை பிள்ளை
இவர்க்கூண் கொடுத்தல் லாலூ ணுண்ணா ரேயென்றும்
ஒழுக்கம் பிழையா தவர் (ஆசார. 17)

இதனையே கௌதமதர்மஸூத்ரம்

ஹோஜயேத் பூர்வம் அதிதி - குமார - வ்யாதித - கர்பிணீ - ஸ்வவாஸிநீ ஸ்தவிராந் ஜகந்யாந் ச (1, 5, 13)

என்றவிடத்துக் கூறும்.

சூரியனை உதிக்கும்போதும் அஸ்தமிக்கும்போதும் பார்த்தல் உரித்தன்று :—

நோக்கார்பகற் கிழவோன்
முன்னொளியும் பின்னொளியு மற்று (ஆசார. 43)

இதனையே மஹாபாரதம்

நேக்ஷேத உத்யந்தம் ஆதித்யம் நாஸ்தம் யந்தம் கதாசந (அநுசா. 161, 17)

என்றவிடத்துக் கூறும்.

வீட்டிற்கு வந்த ஸாதாரணமக்கட்கு உணவு, நீர், இடம், பாய், இன்சொல் இவற்றை வழங்கவேண்டும் :—

முறுவ லினிதுரை கானீர் மணைபாய்
கிடைக்கையோ டிவ்வைந்து மென்ப தலைச்சென்றார்க்கு
ஊணொடு செய்யுஞ் சிறப்பு. (ஆசார. 46)

இக்கருத்தினையே கௌதமதர்மஸூத்ரம்

விபரீதேஷு த்ருண - உதக - பூமி - ஸ்வாகதம்
அந்தத: பூஜா அநத்யாஶஶ்ச (1, 5, 33)

என்ற ஸூத்ரத்திற் கூறும்.

இரு கையால் தண்ணீரைப் பருக லாகாது :—

இரு கையாற் றண்ணீர் பருகார் (ஆசார. 24)
நாஞ்ஜலிநா பிபேத் (1, 9, 10)

என்ற கௌதமதர்மஸூத்ரத்து ஸூத்ரத்திற் கூறப்பட்டது. காலைக் கழுவும்போது ஒரு காலால் மற்றொன்றைத் தேய்த்தல் தகாது :—

காலொடு காற்றேயார் (ஆசார. 35)
.......பாதபாதயாவந......வர்ஜயேத் (1, 9, 32)

என்றவிடத்துக் கூறும்.

பெரியோர்க்கு எதிரில் ஆடையைப் போர்த்திக்கொள்ளு தலும், காலை நீட்டல் அசைத்தல் முதலியனவும் தகா :—

மோட்டுடைப் போர்வையோ ளேக்கழுத்தந் தானசைப்பு
காட்டுளே யானும் பழித்தார் (ஆசார. 83)

இதனையே கௌதமதர்மஸூத்ரம்

ஶூச்ருஷர்ஸமநே கண்டப்ராவ்ருத - அவஸக்திக - அபாச்ரயண - பாதப்ரஸாரணாநி (1, 2, 20)

என்ற ஸூத்ரத்திற் கூறுகின்றது.

சில பாவச்செயல்களின் பயனைப் போக்கப் பிராயச்சித்தம் உண்டு என்றும், சிலவற்றிற்கு இல்லை என்றுங் கருதப்பட்டது.

ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென (புறநா. 34)

மஹாபாதகங்களுக்குப் பிராயச்சித்தம் இல்லை என்றும் ஏனையவற்றிற்கு உண்டு என்றும் மஹாபாரதம்

மஹாபாதகவர்ஜம் து ப்ராயச்சித்தம் விதீயதே
(சாந்தி. 34, 43)

என்ற அடியிற் கூறும்.

போரிற் பெருஞ்சேரலாதன் புறப்புண்பட்டு ப்ராயோபவேசஞ் செய்தனன் :—

தன்போல் வேந்தன் முன்புகுறித் தெறிந்த
புறப்புண் ணாணி மறத்தகை மன்னன்
வாள்வடக் கிருந்தனன் (புறநா. 65, 9—11)
கரிகால் வளவனொடு வெண்ணிப் பறந்தலைப்
பொருதுபுண் ணாணிய சேர லாதன்
அழிகள மருங்கின் வாள்வடக் கிருந்து
(அகநா. 55, 10—12)

முன்னோர் செய்த நல்வினைப்பயன் பின்னோரைக் காக்கும்

கீழ்மரத் தியாத்த சேமவச் சன்ன
இசைவிளங்கு கவிகை நெடியோய்
(புறநா. 102, 5—6)

சனி புகையினும், சுக்கிரன் தெற்கே போயினும், உலகிற்குக் கேடு வரும்.

மைம்மீன் புகையினுந் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளி யோடினும்
(புறநா. 117)

செவ்வாய், புதன் முதலிய க்ரஹங்கள் கூறப்பட்டன:—

உருகெழு வெள்ளிவந் தேற்றியல் சேர
வருடையைப் படிமகன் வாய்ப்பப் பொருடெரி
புந்தி மிதுனம் பொருந்தப் புலர்விடியல்
அங்கி யுயர்நிற்ப வந்தணன் பங்குவின்
இல்லத் துணைக்குப்பா லெய்த விறையமன்
வில்லிற் கடைமகர மேவப்பாம் போல்லை
மதிய மறைய வருநாளில் (பரிபா. 11, 4—10)

(வெள்ளி = சுக்கிரன்; படிமகன் = பூமிஸூதன் = செவ்வாய்: புந்தி = புதன்; அந்தணன் = குரு; பங்கு = சநி; இறையமன் = சனி: பாம்பு = இராகு.)

திருவாதிரையன்று விழா கொண்டாடப்பட்டது:—

ஆதிரை
விரிநூ லந்தணர் விழவு தொடங்கப்
புரிநூ லந்தணர் பொலங்கல மேற்ப
(பரிபா. 11, 77—9)

யாகஞ்செய்யாத பிராம்மணன் சங்கு அறுத்து ஜீவனஞ் செய்தனன்:—

வேளாப் பார்ப்பான் வாளரந் துமித்த
வளைகளைந் தொழிந்த கொழுந்தி னன்ன (அகநா. 24)

பிராம்மணன் அடிக்கடி தூதாக அனுப்பப்பட்டான்:—

தூதொய் பார்ப்பான் மடிவெண் சோலை
(அகநா. 337, 7)

(8) முக்தி

முக்தி, விதேகமுக்தி ஜீவன்முக்தி என இருவகைப்படும். இவ்வுடலைவிட்டு ஜீவன் பிரும்மலோகத்திற்குச் சென்று பின்னர் அடையும் முக்தி விதேகமுக்தி ஆகும். பிரும்மலோகத்திலிருப்பதை அபராமுக்தி என்றும், பிரும்மத்தோடு ஒன்றுபட்ட

நிலையைப் பராமுக்தி என்றுங் கூறுவர். பராமுக்தியும் பிரும்மமும் ஒன்றே ஆகும்.

அபராமுக்தியை ஆசிரியர் திருவள்ளுவனார்

மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார் (திருக். 3)

என்றவிடத்து நிலம் என்ற சொல்லாற் குறித்தனர்.

பராமுக்தியை,

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு (திருக். 358)

என்றவிடத்து சிறப்பென்னுஞ் செம்பொருள் என்ற தொடராற் குறித்தனர்.

இதனை ஒட்டியே சங்கராசாரியர் பிருஹதாரண்யகோபநிஷத்தில் ப்ரஹ்மலோக: (4, 4, 23) என்ற தொகைச்சொல்லை ப்ரஹ்மணோ லோக : என்றும், ப்ரஹ்மைவ லோக : என்றும் இருவகையாகப் பிரித்தனர். முன்னருள்ளது அபராமுக்திக்கும் பின்னருள்ளது பராமுக்திக்கும் பொருந்தும். சிறப்பு என்ற சொல்லைத் திருக்குறளாசிரியர் முக்தியைக் குறிக்க

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்கு
ஆக்க மெவனோ வுயிர்க்கு

என்னுமிடத்துக் கூறினர்.

சிறப்பு, செல்வம் இவற்றிற்குப் பொருந்திய ச்ரேய:, ப்ரேய: என்ற சொற்கள்

ச்ரேயஶ்ச ப்ரேயஶ்ச மநுஷ்யமேத:
தௌ ஸம்பரீத்ய விவிநக்தி தீர: ।
ச்ரேயோ ஹி தீரோ ஹி ப்ரேயஸோ வ்ருணீதே
ப்ரேயோ மந்தோ யோகக்ஷேமாத் வ்ருணீதே ॥ (2,2)

என்ற கடோபநிஷத்துச்செய்யுளில் வழங்கப்பட்டது காண்க.

அம்முக்தியைப் பெற கடவுளின் ஒழுக்கநெறியில் நிற்க வேண்டும். அப்போது அஞ்ஞானம் நீங்க மாசற்ற ஞானம் தோன்றும். இவற்றை

பொறிவா யிலைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார் (திருக். 6)
இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (திருக். 352)

என்றவிடத்து ஆசிரியர் திருவள்ளுவனார் கூறினர். இக்கருத்துக்களையே பகவத்கீதையில்

யதா ஸம்ஹரதே சாயம் கூர்மோங்கானி ஸர்வச: ।
இந்த்ரியாணீந்த்ரியார்த்தேப்ய: தஸ்ய ப்ரஜ்ஞா
ப்ரதிஷ்டிதா ॥ (2, 58)
விஹாய காமாந் ய: ஸர்வாந் புமான் சரதி நிஸ்ப்ருஹ:
நிர்மமோ நிரஹங்கார: ஸ ஶாந்திம் அதிகச்சதி ॥
(2, 71)

என்ற செய்யுட்களிற் கண்ணபிரான் கூறினர்.

பிராணிகளிடத்தில் அருளோடு கூடிய மனம் வீட்டினை அடையச்செய்யும் என நான்மணிக்கடிகையின் இறுதிச்செய்யுளிற் கூறினர் விளம்பிநாகனார்.

முக்தியைக் குறிக்கச் **சேலவு** என்ற சொல்லை நக்கீரனார் திருமுருகாற்றுப்படையில்

சேவடி படருஞ் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்பிரிந் துறையுஞ்
செலவுநீ நயந்தனை யாயின் (62—4)

என்றவிடத்து வழங்கினர்.

அச்சொல்லும் கடோபநிஷத்தில்

ஸா காஷ்டா ஸா பரா கதி: (3, 11)

என்றவிடத்துள்ள **கதி:** என்ற சொல்லும் ஒருபொருட்கிளவி ஆகும்.

அம்முக்தியைக் குறிக்கவே **அந்நிலை** என்ற சொல்லைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில்

நில்லா வுலகத்து நிலைமை தூக்கி
அந்நிலை யணுக வேண்டி (466—7)

என்றவிடத்து வழங்கினர். (அச்சொற்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருள் 'நில்லா வுலகத்து ....' என்ற அடியோடு பொருந்தாமை காண்க.)

அச்சொல்லும் கடோபநிஷத்தில்

தத்பதம் ஆப்நோதி யஸ்மாத் பூயோ ந ஜாயதே (3, 8)
என்றவிடத்துள்ள **தத்பதம்** என்பதும் ஒருபொருட்கிளவி.

இப்பிறப்பிலே ஆசை தன்னைவிட்டு ஒழியின், அக்காலத்திலேயே முக்தி வரும் என ஆசிரியர் திருவள்ளுவனார்

ஆரா வியற்கை .... (திருக். 370)
என்னுமிடத்தும், மாங்குடி மருதனார்

சிறந்த வேதம் விளங்கப் பாடி (மதுரைக், 468–471)

என்னுமிடத்தும், கடோபநிஷத்

யதா ஸர்வே ப்ரமுச்யந்தே .... (6, 14)
என்னுமிடத்தும், ப்ருஹதாரண்யகோபநிஷத்

யோ அ காம: .... (4, 46)

என்னுமிடத்தும், மஹாபாரதம்

யோ ந காமயதே .... (அச்வமே. 47, 8)

என்னுமிடத்துங் கூறும் என முன்னரே காட்டப்பட்டது. முக்தி ஞானத்தால் வரும் என

ஞானத்தால் வீடாக நாட்டு (சிறுபஞ்ச. 36)
என்னுமிடத்துக் காரியாசான் கூறினர்.

இவற்றால், தற்போதுள்ள சங்கநூல்கள் பலவற்றுள் வைதிகமார்க்கமே உணர்த்தப்பட்டது என்பது அறியப்படும்.

BOOKS OF THE AUTHOR

1. Lectures on Patañjali Mahābhāṣya Vol. I (*āhnikas* 1—3).
2. Do. Vol. II (*āhnikas* 4—6) in press
3. Do. Vol. III (*āhnikas* 7—9) to be sent to press.
4. Mahābhāṣyaprakāśikā āhnikatrayam (in Sanskrit) to be sent to press.
5. History of Sanskrit Literature in Tamil.
6. History of Sanskrit Language in Tamil.
7. *Toṉiviḷakkụ* (Tamil reading of Dhvanyālōka).
8. A study of Kālidāsa's Kumārasambhava Canto. I.
9. Comparative Grammar of the Tamil Language.
10. *Tolkāppiyam*—Eḻuttatikāram—with Tamil Commentary.
11. Do. —with English Commentary.
12. *Tolkāppiyam—Collatikārakkuṟippu.*
13. *Tolkāppiyam—Collatikāram*—with English Commentary.
14. *Tolkāppiyam—Poruḷ-atikāram—Akattiṇaiyiyal* and *Puṟattiṇai-y-iyal*—with English Commentary.
15. Do. —*Kaḷaviyal, Kaṟpiyal* and *Poruḷiyal*—in press.
16. Do. *Meyppāṭṭiyal* etc. to be sent to press.
17. *Tirukkuṟaḷ—Aṟattupāl* with *Bālar-urai.*
18. Do. —*Poruṭpāl* and *Kāmattupāl* with *Balār-urai.*
19. Tamiḻ-moḻi-nūl.
20. Historical Tamil Reader.
21. An Enquiry into the Relationship of Sanskrit and Tamil.
22. History of Grammatical Theories in Tamil and their relation to Grammatical Literature in Sanskrit.
23. Śaṅganūlhaḷum vaidikamārggamum.
24. Vāsukivaḷḷuvam (a drama in Tamil) to be sent to press,

Nos. 1, 2, 5, 6, 13 and 20 are Annamalai University Publications.

No. 21 is Travancore University Publication.

Nos. 11, 14, 15 and 22—Published in the formal of Oriental Research, Madras.

Nos. 7, 10, 17, 19 and 23—Published under the patronage of the Maṭhādhipatis of Tiruppanandal Mutt.

No. 17—Published by the Kāmakōṭi Publishing House, Madras.